விலை சதம் 20

# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, புரட்டாதி௳ 20 ஞாயிறு (6-10 68) றஜப் 13 புத்தகம் 22 இதழ் 52




## தமிழரசு - தமிழ் காங்கிரஸ் இணைப்பு முயற்சியின் பின்னணி

# அந்தரங்கம் அம்பலம்

தமிழரசுக் கட்சிக்கும் தமிழ் காங்கிரசுக்குமிடையே 'ஒட்டு'ப் போட நடந்த முயற்சிகளின் பின்னணியில் நடந்த சம்பவங்களை அம்பலப் படுத்தக்கூடிய நிலையில் சுதந்திரன் இன்று இருக்கிறது.

தமிழ் மக்களிடையே தமிழ் காங்கிரஸ் இழந்துவிட்ட செல்வாக்கை ஓரளவு புதுப்பித்து அடுத்த தேர்தலில இப்போது தம் வசமுள்ள தொகுதிகளையாவது காப்பாற்றிவிடலாம என்ற நப்பாசையில் தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர் விரித்த 'ஒற்றுமை' வலையை உண்மையென நம்பி கொழும்புத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் ஏமாந்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

அதே வேளையில் யூ. என். பி.யையே என்றென்றும் ஆட்சியில் வைத்திருக்கவேண்டும் என்று கருதும் சில பிரமுகர்களும் இம் முயற்சியில் தொடர்பு கொண்டிருந்ததாக தெரியவருகிறது.

அண்மைக்காலத்தில் வட பகுதியில் தமிழ் காங்கிரஸ் தொடர்ச்சியாகப் பல பிரசாரக் கூட்டங்களை நடத்தியது தெரிந்ததே. இக்கூட்டங்களில் தமிழ் மக்கள் அதிக அக்கறை காட்டாததைக் கண்டு தமிழ் காங்கிரஸ் பிரமுகர்களுக்கு நாடி தளர்ந்துவிட்டதாம். அடுத்த பொதுத் தேர்தலில் இப்போதிருக்கும் மூன்று தொகுதிகளைக்கூட காப்பாற்ற முடியாதென்பதை தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் தெளிவாக உணர்ந்து கொண்டனரென்றும் சொல்லப்படுகிறது:

கோணேஸ்வர ஆலயப் பிரச்சினையில் தமிழரசார் அரசாங்கத்தைவிட்டு வெளியேறிய பின்னரும், தமிழ் காங்கிரசார் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு தமிழ் மக்கள் கொதிப்படைந்திருப்பதை தமிழ் காங்கிரஸ் தலைமைப் பீடம் தெளிவாக உணர்ந்து கொண்டுள்ளதாம்.

இதன் பின்னரே, தமிழ் காங்கிரஸ் மீதுகொண்டுள்ள வெறுப்பிலிருந்து தமிழ் மக்களின் கவனத்தை திசை திருப்பவும், தமது செல்வாக்கை ஓரளவு மீண்டும் கட்டியெழுப்பவும் என்ன செய்யலாம் என்று தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் கொழும்பில்கூடி அந்தரங்கமாக ஆலோசனை நடத்தினரென்றும் 'அப்போதுதான்' ஒற்றுமை ஐக்கியம் என்ற சுலோகத்தை எழுப்புவதென்றும் முடிவுசெய்யப்பட்டதாம்.

'ஒற்றுமை'க் குரலெழுப்புவதால் இருவழியாலும் தமக்கு 'நன்மை' கிடைக்கும் என்று தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் கருதினராம்.

(1) கொள்கையும் மக்கள் செல்வாக்குமற்ற தமிழ் காங்கிரஸ் தமிழ்பேசும் மக்களின் அபரிமிதமான ஆதரவும், செல்வாக்குமுள்ள தமிழரசுக் கட்சியுடன் "ஒற்றுமை முன்னணி" அமைக்கமுடியுமானால் அடுத்த தேர்தலில் 'சுலபமாக' சில

(9-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை மத்திய வங்கியில்

## தமிழ் செய்தித் திரட்டை மூடிவிடும் முயற்சியா?

தமிழ் மக்களின் நீண்டகாலப் போராட்டத்தின் பயனாக இலங்கை மத்திய வங்கி தமிழிலும் இப்போது வெளியிட்டுவரும் செய்தித்திரட்டைநிறுத்திவிட மத்திய வங்கியில் இப்போது சதி முயற்சி நடக்கிறதா? இந்தக் கேள்வி வங்கியில் பணியாற்றும் ஊழியர்களிடையேயும் தமிழ் மக்கள் மத்தியிலும் எழுந்துள்ளது.

இதற்குக் காரணம் தமிழில் வெளியிடப்படும் செய்தித் திரட்டின் தொகை மெல்ல மெல்ல குறைக்கப் பட்டுவருவதேயாகும். ஆரம்பத்தில் 250 பிரதிகள் வெளியிடப்பட்ட தமிழ் செய்தித்திரட்டு, பின்னர் 150 ஆகக் குறைக்கப்பட்டது. இதற்குப்பின்னர், வடக்கு கிழக்கிலுள்ள மத்திய மகாவித்தியாலயங்களுக்கு மட்டுமே அனுப்புவது என்று முடிவுசெய்யப்பட்டு இப்போது ஆக 100 பிரதிகளே அச்சடிக்கப்படுகின்றன என்று தெரிகிறது.

அதே நேரத்தில் மத்திய வங்கியிடம் தமிழ் செய்தி திரட்டு அனுப்பும்படி கோரினால் இல்லையென்று கைவிரிக்கப்படுகிறதாம்.

சிங்களச் செய்தித் திரட்டு மட்டும் ஏறத்தாழ 446 பிரதிகள் தயாரிக்கப்படுகின்றனவென்று தெரிகிறது.

தமிழ்ச் செய்தித் திரட்டின் தொகையை 250லிருந்து 100 ஆக வெட்டிக் குறைத்ததன் உள்ளாந்தர நோக்கம் விரைவில் அதற்கு மூடுவிழா நடத்துவதற்காக இருக்குமா என்ற சந்தேகம் எழுப்பப்படுகிறது.

இது ஒருபுறமிருக்க, மத்திய வங்கியில் தமிழ்மொழி பெயர்ப்பாளர்களுக்கும் தலைமை உயர்பதவியாளராக சிங்களவர் ஒருவரே இருந்துவருவதாகவும் தமிழ் மொழி பெயர்ப்புத் துறையைக் கண்காணிக்க ஓர் சிங்களவரால் எப்படி முடியும் என்றும் கேட்கப்படுகிறது. தூய தமிழ்ச் சொற்களை புழக்கத்தில் கொண்டுவருவதற்கும், தமிழ் மொழி

(9-ம் பக்கம் பார்க்க)

### தமிழ் காங்கிரஸ் எம். பீக்களுக்கு

## பிரதமர் வாய்ப்பூட்டு?

கோணேஸ்வர ஆலயத்தைப் புனித நகராக்குவதற்கு எல்லவகுக்கத்திரு. திருச்செல்வத்தால் நியமிக்கப்பட்ட கமிஷனை ஒரு பௌத்த பிக்குவின் எதிர்ப்புக்கு அஞ்சி பிரதமர் நிறுத்தி வைத்ததை கண்டித்தும் பிரடெரிக் கோட்டையை புனித நகராக்கும்படி கோரியும், கட்சி சார்பற்ற முறையில் குளக்கோட்டன் இந்து இளைஞர் சங்கம் சென்ற வார இறுதியில் திருமலையில் நடத்திய ஊர்வலத்திலும், கூட்டத்திலும் தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் பங்குபற்றாததன் உண்மையான காரணம் என்ன?


கடைசிநேரத்தில் பிரதமர் தமிழ் காங்கிரஸ் எம். பீக்களுக்கு வாய்ப்பூட்டு போட்டாரா?

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்திடம், திருமலைப் புனித நகர்க் கூட்டத்தில் அரசாங்கக் கட்சியில் இருந்து கொண்டே தமிழ்காங்கிரஸ் பங்குபற்றுவதை தாம் அனுமதிக்க முடியாது என்று பிரதமர் கூறினாரா?

பிரதமரின் எச்சரிக்கையை அடுத்து அவசர அவசரமாகதிரு. பொன்னம்பலம் தொலைபேசி மூலம் திருமலையிலிருந்த இரண்டு சிவசிதம்பரங்களையும்அழைத்துபுனித நகர்க் கூட்டத்தில்பங்குபற்றாதுகொழும்புதிரும்பும்படி உத்தரவிட்டாரா?

திரு. பொன்னம்பலத்தின் கட்டளையைச் சிரமேற்றாங்கியே இரண்டு சிவசிதம்பரங்களும் திருமலைக் கூட்டத்தில்பங்குபற்ற கடைசிநேரத்தில் மறுத்துவிட்டனரா?

—மேற் கண்டகேள்விகள் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றன.




நீரோடை கடலில் சேர்வதா? கடல் நீரோடையுடன் சேர்வதா?

இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேசுவரத்தின புராணவரலாறு!

ஒரு நாள் இராவணனுடைய தாயார் நெல் குற்றிக் கொண்டிருந்தாள். அதைக் கண்டா ராவணன் வருத்த முற்று யாது காரணம் என்று கேட்க, தான் தினமும் மாவினுல் 1000 சிவலிங்கம் செய்து பூஜை செய்தபின்னர் அதை கங்கையில் விடும் பழக்கம் உண்டென்றும் மறுநாளைக்கு லிங்கம் செய்ய மாவில்லாததால் நெல் குற்றி மாவு தயார் செய்வதாகவும் கூறினுள்.

சிவபெருமானைப் பூஜை செய்ய ஏன் மாவினுல் லிங்கம் செய்ய வேண்டும். கைலாய மலைக்குச் சென்று சிவபெருமானைக் கேட்டு ஒரு லிங்கம் பெற்று வருவதாகக் கூறி கைலாயம் சென்ருன் இராணவன்.

கைலாயம் சென்று சிவனைக் குறித்து வழிபாடு செய்து வேண்டி நின்ருன். சிவன் ஓர் அந்தணர் உருவத்தில் வந்து சிவலிங்கத்தைக் கொடுத்துச் சென்ருர்.

வரும் வழியில் தேவர்கள் சூழ்ச்சியால்இராவணனுக்கு சலபாதை உண்டாக, அப்பொழுது அங்கு அந்தணர் உருவில் வந்த விநாயகரிடம் லிங்கத்தைக் கொடுத்தான். விநாயகர்அதைஇராவணன் அப்பால் சென்றதும் கீழே வைத்துவிட்டு மறைந்தார்.

சென்று இராவணன்வெளியே வந்து தன் குற்றம் பொறுக்கும்படி வேண்டி, தன் தலையைக் கொய்து தசை நார்கள் அமைத்து வீணையால் சாமகானம செய்ய இறைவன் மகிழ்ந்து தேரும், வாளும், லிங்கமும் கொடுத்து மறைந்தார்.

இராவணன் திரும்பிவரும் பொழுது அந்தணர் வடிவில் நின்ற விஷ்ணுவை ஊரில் விசேடம் உண்டா என்று கேட்க, அவனுடைய அன்னை இறந்து விட்டாள் என்ற செய்தி கேட்டுத் துன்புற்ருன்.

தாய்க்காகக் கொண்டு வந்த லிங்கத்தை என்ன செய்வதென்று கேட்க, அதைத் திருக்கோணேசுவரத்தில் வைத்து விடும்படி கூறினுர். ஈழநாட்டில் உள்ள எல்லாத்தலங்களிலும் தென் கயிலாயமே சிறந்ததாக விளங்கிற்று. இத்தலத்திற்கு உரிய மரம் ''சுவேத கூவிளம்'' தீர்த்தம். பாபநாச தீர்த்தம் இதுவே புராணவரலாறு.

### 8000 ஆண்டுகளுக்கு முன்

இராமாயண காலம் கி. மு. 6000 ஆண்டுகள். இன்றைக்கு 8000 ஆண்டுகளுக்கு முன்னரே ஈழநாட்டில் சைவம் நிலை பெற்றிருந்தது என்பது மெய்யாகின்றது.

## 8000 ஆண்டுகட்கு முன்பே ஈழத்தில் சைவம் நிலைபெற்றிருந்தது!

இராவணன் திரும்பி வந்து பார்த்தபோது, அங்கு ஓர் கோவிலும் அதனுள் தான் கொண்டு வந்த லிங்கமும் இருக்கக் கண்டான். மீண்டும் கைலாயம் சென்று மற்றொருலிங்கத்தைக் கொண்டு வர, முன் போலவே சலபாதை ஏற்பட மீண்டும் விநாயகர் சிறுவன் உருவில் தோன்ற அவரிடம் கொடுத்துச் சென்ருன்.

இப்பொழுது மூன்றுமுறை அழைத்தும் இராவணன்திரும்பாததால் சிறுவன் லிங்கத்தை பூமியில் வைத்து விட்டான். ராவணனுல் லிங்கத்தை எடுக்க முடியவில்லை.

மறுபடியும் கைலாயம் செல்லும் வழியில் விஷ்ணு அந்தணன் வடிவில் தோன்றி தட்சிண கைலாயமாகிய திருகோணமலைக்குச் சென்ருல் சிவலிங்கம் பெறலாம் என்றுகூற, இராவணன் திருகோணமலைக்கு வந்து இறைவனை வழிபட்டான்.

இறைவன் காட்சியளிக்காததால் கோபம் கொண்டு மலையின் கீழ் இறங்கி, மலையைக் கட்டிப் பிடித்து அசைத்தான். மலை அசையவில்லை.

மலையின் தெற்குப் பகுதியில் வாளினுல் வெட்டினுன். மலையின் சிறு துண்டு உடைந்து மேற்கில் போய் விழுந்தது. பின்பு கீழே சென்று மலையை அசைத்தான். கோணநாயகர் தன் பெருவிரலால் மலையை ஊன்றினுர். மலை இராவணனை நசுக்கியது. கடலுள் அமிழ்ந்தான்.

இராவணன் இறந்து விட்டான் என்று எண்ணி அவன் தேரை தேவர்கள் கடலில் அமிழ்த்தி ஆனந்தம் அடைந்தார்கள். சில காலம் ராமர் திருக்கோணேசுவரத்தில் வழிபாடு செய்ததாகக் கூறப்படுகிறது. திருமூலர், திருமந்திரத்தில் ஈழநாட்டைச் சிவபூமி என்று குறிப்பிட்டுள்ளார். ஆதலால் திருக்கோணமலையிலுள்ள கோணேசர் ஆலயம் உலகிலேயே மிகப் பழமையான வழிபாட்டுத் தலம் என்று ருசுவாகின்றது.

### திருக்கோணமலை கோவில்கள்

''கோவிலுஞ் சுனையுங்
கடலுடன் சூழ்ந்த
கோண மாமலை
அமர்ந்தாரே''

**என். ராமகிருஷ்ணு**

என்று கோணமாமலை அமர்ந்த பெருமானை திருஞான சம்பந்தர் பாடியுள்ளார்.

கோண மா மலையில் பல கோவில்கள் உள்ளன. முக்கியமானது திருக்கோணேசர் ஆலயம். இது உயரமான மலையின் மீது அமைந்துள்ளது.

இக்கோவில் போர்த்துக்கீசியர் காலத்தில் அழிக்கப்பட்டது. பின், இன்று நாம் காணும் புதுக்கோவில் அமைக்கப்பட்டது. பல்லவர் சிற்ப முறை அமைந்த தூண்களை இங்குகாணலாம்.

குகைவாயிலிற் காணப்படும் இரண்டு தூண்கள் 16 பட்டை கொண்டவையாகும். சதுரங்கள் அமையப் பெற்றனவாகவும் அச்சதுரத்தில் தாமரைப் பூக்கள பொறிக்கப் பட்டுள்ளனவாகவும் காணப்படுகின்றன.

### சோழர்கால சிற்பங்கள்

சோழர் காலத்தில் இம்முறையில் அமைந்த தூண்களும் காணப்படுகின்றன. கோவிலுக்குப் பக்கத்தில் பாதாளத்தில் சமுத்திரக் காட்சி காண்கிருேம். மலையின் அடிவாரத்தைப் படகில் சென்று பார்த்தால் பழையகோயிலின் அழிபாட்டுச்சின்னங்களைக்காணலாம். போர்த்துக்கீசியர், ஒல்லாந்தார் எல்லாக் கோவில்களையும் இடித்துத் தள்ளினர்.

ஆங்கிலேயர் காலத்தில் மறுபடியும் அவைகள் செங்கல்லாலும், சுண்ணும்பா

## இராமனும் இராவணனும் பூஜித்த புனித ஸ்தலம்!

லும் கட்டப்பட்டன. தற்போதுள்ள கோயில் அழகாகக் கட்டப்பட்டுள்ளது.

திருக்கோணேசர் ஆலயத்தில் சிவன் சக்தி, முருகன், விநாயகர், வயிரவர், சண்டேசர், சூரியர், சந்திரர் முதலிய கோவில்கள் உள்ளன. 1950-ம் ஆண்டில் சில திருவுருவங்கள் கண்டெடுக்கப்பட்டன.

### 16 கோவில்கள்

மற்றும் இங்குள்ள கோவில்கள் ஆவன:- மலயாவெளி பிள்ளையார் கோவில், வெள்ளை வில்வம் கோணேசர் கோவில், முத்துக்குமாரசாமி கோவில், புதுருேட்டு கற்பகவிநாயகர் கோவில், விசுவநாதர் கோவில். மாரியம்மன் கோவில், வீரகத்தி பிள்ளையார் கோவில், சனீசுவரன் கோவில், கிருஷ்ணன் கோவில், சீர்காளி அம்மன் கோவில், முற்றவெளி பத்திரகாளி கோவில், மற்றும் பல பிள்ளையார் கோவில்கள் இருக்கின்றன. ஆக மொத்தம் 16 கோவில்கள் உள்ளன.

மற்றும் ராவணன் வெட்டு முக்கோண வாயில் முதலியன நம் மனதைக் கவர்கின்றன. மேலிருந்து பார்த்தால் கடலில் கிடு கிடு பாதாளமாகத் தெரியும்.

### கல் வெட்டுக்கள்

திருகோணமலையில் உள்ள கோட்டையின் பெயர் பிறட்ரிக் கோட்டை. இதன் வாயிலில் சில கல்வெட்டுகள் உள: இக்கல் வெட்டுக்கள் கி. பி. 16-ம் நூற்ருண்டைச் சேர்ந்தவை என்றும் எண்ணுகின்ருர்கள். மற்றும் சில எழுத்துக்கள் கி. பி. 14, 15 நூற்ருண்டுகளைச் சேர்ந்தனவாக உள்ளன.

பாண்டியர்களுக்கும் திருகோணமலைக்கும தொடர்பு இருந்து வந்ததைச் சில கல்வெட்டுகள் காட்டுகின்றன. பறங்கியரைப் பூனைக்கண்ணன்என்றும்செங்கண்ணன், புலூகக் கண்ணன் என்று ஒல்லாந்தரையும், பிரஞ்சுக்காரரையும் பிரிட்டானியரையும் மற்றும் தமிழரை வடுகர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

போர்த்துக்கீசியர் ஆண்ட போது, இலங்கைக்கோணேசர் கோவிலை இடித்த தளபதியின் பெயர் கான்ஸ்டன்டைன் டிசா. மற்றுமொருவர் பெயர் டிநொஹன்ஹா

1624-ம் ஆண்டு கோவில் இடிக்கப்பட்டு அதன்செல்வமெல்லாம் கொள்ளையிடப்பட்டன. அந்தக் கோவிலின் சற்களைக் கொண்டு கோட்டை கட்டப்பட்டது. இப்போதுள்ள கோட்டையை பார்க்கும்போது, அக்காலத்தில் கோவில் எவ்வளவு பெரிதாக இருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்க முடிகின்றது.

1624 முதல் சுமார் 175 ஆண்டுகள்கோவில்வழிபாடு தடுக்கப்பட்டிருந்தது.பின்பு பிரிட்டானியர் 1796ல் திருக்கோணமலையைக் கைக்பற்றினர்.

அதன் பிறகு மக்களுக்குப் மத சுதந்திரம் வழங்கப்பட்டது. கோணேசர் ஆலயம் மீண்டும் பிரபலமாயிற்று. கோட்டைக்குள் சென்று பூஜை செய்ய அனுமதிபெற்றுச் சென்ருர்கள். இப்படியே கொஞ்சம் கொஞ்சமாக சைவ வழிபாடு முன்னேறி வந்தது.

கோணேசர்மலைக்கு மக்கள் வெள்ளியும் திங்களும் மற்ற சிறப்பு வழிபாடு காலங்களிலும் சென்று வந்தனர்.

### புலவர்கள்

திருகோணமலையில் பல புலவர்கள் வாழ்ந்து பல நூல்களை இயற்றி உள்ளார்கள். அத்தகைய நூல்கள் போர்ச்சுகல் நாட்டில் லிஸ்பன் நகரில் உள்ள அஜீபி நூல் நிலையத்தில் இருக்கின்றனவாம்.

நமக்கு தற்போது கிடைத்துள்ள நூல்கள் 17ம் நூற்ருண்டின் பிற் பகுதியைச் சேர்ந்தனர். பல புலவர்களின் பெயர்கள் தெரியவில்லை. வித்துவான் தம்பையாபிள்ளை, சட்டம்பி தம்பையா, சரவணமுத்து குருக்கள் கதிரித்தம்பி புலவர் முதலானோர் சென்ற நூற்ருண்டில் வாழ்ந்த புலவர்கள்.

திரிகோணமலை கனகசுந்தரம் பிள்ளை தமிழ் மொழிக்குச் சிறந்த தொண்டு ஆற்றியவர். அகிலேசம் பிள்ளை என்பவர் மற்ருெருவர்.பண்டிதராசர் என்பவர் வடமொழிலும் தென்மொழியிலும் வல்லவர். மற்றும் பலர் திருகோணமலையைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ளார்கள்.

### 340 ஆண்டுகளுக்குப் பின்

திருக்கோணேசர் ஆலய சரித்திர வரலாற்றில் 340 வருடங்களுக்குப் பிறகு ஈழநாட்டில் வாழும் சைவப் பெரு மக்கள் உழைப்பால், 1963ம் ஆண்டில் கோணேசருக்கும் மாதுமையம்மையாருக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இதற்கு முன் குளக்கோட்டு மன்னன் காலத்தில் திருப்பணிகள் நடைபெற்றதாக கல்வெட்டுகள் கூறுகின்றன.

1624ல் வெள்ளையர்கள் வந்தது முதல் அவர்கள் செல்லும்வரை ஒன்றும் நடைபெறவில்லை.

இன்று நாம் கோணேசர் ஆலயத்திற்குச் செல்லும் வழியில் அழகான மான் கூட்டங்களை இயற்கைச் சூழ்நிலையில் காண்கின்ருேம். குரங்குகளையும் காண்கின்ருேம்.

### கன்னியா வெந்நீருற்று

திருகோணமலை செல்லும் ஒவ்வொருவரும் அவசியம் பார்க்கவேண்டியது ''கன்னியா வெந்நீர் ஊற்று'' இது திருகோணமலையிலிருந்து 6 மைல் தூரத்தில் உள்ளது. 7 கிணறுகள் உள்ளன.

இராவணன் தன் தாயாருக்கு ஈமக்கடன்களைச் செய்ய மஹா விஷ்ணு தன் தண்டத்தால் ஏற்படுத்தியவை இக்கிணறுகள் என்றுகூறுகின்றன புராணங்கள்.

இவைகளின் பக்கலில் ராவணனுல் கட்டப்பட்ட விநாயகா கோவில் ஒன்று உளது. மேலும் கண்ணகி கோவில் இங்கு இலங்கை கயவாகு என்ற அரசனுல் கட்டப்பட்டது என்றும், கண்ணகி என்ற பெயரே காலப் போக்கில் திரிந்து கன்னியாவாயிற்று என்றும் அறிஞர்கள் கூறுகிருர்கள்.

1821ம் ஆண்டில் ஜோன் டேவி என்பவர் இவ் ஊற்றை வருணித்துள்ளார். 88.50 லிருந்து 107, வரை உஷ்ணம் உள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சூரிய வெப்பம் அதிகரிக்க அதிரிக்க ஊற்றின் உஷ்ணம் குறைந்து கொண்டும், சூரியன் வெப்பம் தணியத்தணிய இதன் உஷ்ணம் அதிகரித்துக் கொண்டும் செல்கின்றது. இதன் நீர் சருமவியாதிகளுக்கும் நல்ல மருந்து. இதன் நீரை கண்டியில் பரிசோதித்த பொழுது, இதில் உப்புகள் நைட்ரஜன் மற்றும் கார்பாலிக் அமில வாயுவும் உள்ளதாகக் கண்டு பிடிக்கப்பட்டது.

**இக்கட்டுரையை எழுதியிருக்கும் அன்பர் ராமகிருஷ்ணு தமிழகத்தைச் சேர்ந்தவர். இவர் சில மாதங்களுக்கு முன்னர், தமிழறிஞர் கி. வா. ஜ. வுடன் ஈழத்துக்கு விஜயம் செய்திருந்தார்.**




ஆர். விஜய இந்திரன்,
கொழும்பு.

கே: நான் சுதந்திர சோஷலிஸ்ட் கட்சியொன்றை ஆரம்பித்து அதன் பொதுச் செயலாளராகப் போகிறேன். அக்கட்சியின் தலைவர், அங்கத்தவர் எல்லாம் நான்தான். சமஷ்டிக் கட்சியைத் தாக்கி ஒரு அறிக்கை விடப் போகிறேன். அதைத் தயாரித்து தருவீரா?

ப: ஐயா விஜய இந்திரனே எந்தப் பத்திரிகையில் உமது அறிக்கை வரவேண்டும் என்கிறீர்? 'தினப் பொய்'யில் தானே! பேசாமல் தொலைபேசி மூலம் அப் பத்திரிகை ஆசிரியருக்குஅறிவித்துவிடுங்கள். சிவநாயகங்கள் கச்சிதமாக அறிக்கை தயாரித்து போட்டுவிடத் தயாராக இருக்கிறார்கள்!

ஃ

வி. மாதவி,
உடுவில்.

கே: மாஜி தமிழ் அமைச்சர்களான பொன்னம்பலத்துக்கும் திருச்செல்வத்துக்குமுள்ள வேறுபாடென்ன?

ப: முன்னவர் சேர் ஜோன் கொத்தலாவலையால் மந்திரி பதவியிலிருந்து உதைத்துத் தள்ளுப்படு மட்டும் பதவியை இறுகப் பற்றிக் கொண்டிருந்தார். பின்னவரோ விலக வேண்டாம் என்று யூ. என். பி. ஆதரவாளர்கள் இரந்துகேட்டும், பதவியை உதறித் தள்ளிவிட்டார்.

கே: தமிழ் காங்கிரசைச் சேர்ந்த இரண்டு சிவாக்களும் திருமலை கோணேசராலய புனிதநகர் கூட்டத்தில் கலந்து கொள்ளாததேன்?

ப: கோணேசர் கோயில் போனாலும் பரவாயில்லை; யூ.என.பி.யை பகைத்துக் கொள்ள அவர்கள் ஒரு போதும் விரும்பமாட்டார்கள்!

ஃ

வி. பெருமாள்,
அட்டன்.

கே: திரு. பொன்னம்பலம் யூ. என். பி. அரசாங்கத்தை விட்டு எப்போதாவது விலகுவாரா?

ப: மாட்டார். திரு. பொன்னம்பலமே அடிக்கடி ஆணையிடும், "கோட்டை முனியப்பர்" சாட்சியாக அது நடக்கவே நடக்காது!

கே: தமிழ் காங்கிரசுக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இடையே ஐக்கிய முன்னணி அமைப்பது பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: கொள்கையற்ற சோதாக்களுக்கும், இலட்சிவாதிகளான தமிழரசாருக்கும் எப்படி 'உறவு' ஏற்பட முடியும்?

கே. ராமசாமி
யாழ்ப்பாணம்.

கே: உலகில் பொய் எப்பொழுது தோன்றியது?

ப: பொன்னம்பலம் தோன்றிய நாளிலிருந்து!

கே: திரு. மு. சிவசிதம்பரம் இன்னும் உப சபாநாயகர் பதவியை ராஜினுமா செய்யவில்லையே ஏன்?

ப: பொ. கட்சியினர் எவராவது தனிப்பெரும் தலைவருட்பட பதவியிலிருந்து உதைத்து தள்ளப்பட்டுள்ளனரே தவிர தாமாகவே பதவியை உதறி எறிந்ததாக அரசியல் வரலாறே இல்லையே!

ஃ

திரு. மு. கனகரத்தினம்
கரவெட்டி.

கே: எனக்கு ஒரு வழக்கு விசாரணைக்கு இருக்கிறது. எனது எதிராளிக்குத் திரு. பொன்னம்பலம் ஏற்படுகிறார் என்று அறிகிறேன், எனக்காக வாதாட யாரை ஏற்படுத்தலாம் என்று ஆலோசனை கூறுவீரா?

ப: திரு. சர்வானந்தாவை ஏற்பாடுசெய்யும். கிளிநொச்சிப் பட்டின சபை வழக்கிலே திரு. பொன்னம்பலமும் அவருக்கு உதவியாக முன்னாள் நீதிபதி. திரு. குமாரசாமி, திரு. சண்முகநாதன், பாரிஸ்டர் சிவானந்தன், திரு. மோதிலால் நேரு ஆகியோர் வாதிட்டும், ஓர் இளம் அப்புக்காத்தான திரு. சர்வானந்தா தனியாக நின்று வாதிட்டு அண்மையில் வெற்றியீட்டிக் கொடுத்திருந்தாரே!

கே: தேசிய அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட தமிழருக்குபாதகமான சட்டங்களை யெல்லாம் தமிழரசுக்கட்சி ஆதரித்து விட்டு இன்று அரசாங்கத்திலிருந்து வெளியேறியிருக்கிறது என்று கூறுகிறாரே திரு. பொன்னம்பலம்?

ப: திரு. பொன்னம்பலம் அப்பொழுது என்ன எதிர்க் கட்சியிலா இருந்தார்? அவரும் தமிழரசாரைப் போல அரசாங்கத்தில்தானே அங்கம் வகித்தார். இன்று தமிழரசு வெளியேறிய பின்னரும் ஒட்டிக் கொண்டிருக்கிறார்! தேசிய அரசாங்கம் கொண்டுவந்த சட்டங்களை யெல்லாம் தமிழரசாரைப் போலவே பொன்னம்பலமும் ஆதரித்து வாக்களித்தார். தமிழரசார் தாம் ஆதரித்த சட்டங்கள், எதுவும் தமிழ் மக்களுக்கு பாதகமானதென உளமாரக் கருதவில்லை. ஆனால் திரு. பொன்னம்பலத்தின் கூற்றின்படி தமிழ் மக்களுக்கு துரோகமானதென்று உளமார உணர்ந்து கொண்டே அச் சட்டங்களை திரு. பொன்னம்பலம் ஏற்றுக் கொண்டுள்ளார். எனவே அரசாங்கம் கொண்டுவந்த சட்டங்கள் உண்மையில் தமிழருக்கு பாதகமானவை என்றால், நெஞ்சார அதை உணர்ந்து கொண்டு ஆதரித்த படு துரோகி திரு. பொன்னம்பலம் அல்லவா?

ஃ

சு. த. சிவராஜா,
கைதடி வடக்கு.

கே: தமிழரசுக் கட்சி தேசிய அரசாங்கத்தைவிட்டு விலகாது விலகினால் தெரியும் அம்பலம் ஒன்று கூறியயவர்கள் இன்று யாது கூறப் போகின்றார்கள்?

ப: பொய்யர்களுக்கு பொய்களுக்காபஞ்சம்? இன்னும் ஏதாவது பொய்களைக் கட்ட ஆரம்பிப்பார்கள்.

கே: கோணேஸ்வர ஆலயப் பிரச்சினையில் தமிழ்காங்கிரசின் ஆயுட்காலத் தலைவர் ஜீ. ஜீ. பொன்னம்பலம் வாய்மூடியாக மௌனியாக இருப்பதேன்?

ப: அது கிழக்கு மாகாணத்தவர்களின் பிரச்சினை; எனக்கென்ன அக்கறையென்று கருதியிருக்கலாம்! தமிழ் மக்களிடையே பிரதேச வேறுபாட்டை வளர்த்தவரே அவர்தானே!

ஃ

ஐ. நடேசன்,
நெல்லியடி.

கே: டட்லி புனிதநகர் கமிஷனை கலைத்ததற்கு ஏன் நொண்டிக் காரணம் கூறுகிறார்?

ப: சரியாண [illegible] இல்லாததால்!

ஃ

தமிழன்,
வெள்ளவத்தை.

கே: தமிழரசுக் கட்சியின் கொள்கை சமஷ்டி அரசு அமைப்பதுதான். அதன் பொருளாதாரக் கொள்கை என்ன?

ப: சோஷலிசம்.

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்,
மாத்தளை.

கே: முன்வைத்த காலை பின்வைக்காத அன்றைய வீரத்தமிழன் எங்கே?

ப: பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பத்திரமாக வாழ்ந்துகொண்டு இன்றையத் தமிழர்களின் மேடைப் பேச்சுக்கு பயன்படுகிறான்!

கே: "அடல்ஸ் ஒன்லி" பத்திரிகையான "தந்தி"யைப் பற்றி தங்கள் கருத்தென்ன?

ப: 'அடல்ஸ் ஒன்லி' என்று எதற்காக ஆங்கிலத்தை இழுக்கிறீர்கள். காவாலிப் பத்திரிகை என்று கன்னித் தமிழில் கூறுங்கள்!

ஃ

தமிழரசன்,
காரைநகர்.

கே: நீங்கள் சைவசமயமா? கிறிஸ்தவ சமயமா?

ப: இரண்டுமல்ல; வள்ளுவம்!

கே: திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் இன்னும் ஐக்கிய தேசிய கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருப்பதேன்?

ப: பாலில் கலந்துவிட்ட நீர் வேறுபடுவதுண்டா?

கே: தமிழரசுத் தந்தை இவ்வயோதிப வயதிலும் கஷ்டப்பட்டு உழைப்பதேன்?

ப: வருங்கால தமிழ்ப்பரம்பரையை வாழவைக்க!

ஃ

இ. ராணிமலர்,
கோப்பாய்.

கே: என்னை ஒருவர் காதலிக்கிறார். நானும் அவரை விரும்புகிறேன். அவர் என் வாழ்க்கை துணைவனாக வருவாரா?

ப: அது உங்கள் இருவரது அன்பின் ஆழத்தை பொறுத்தது!

ஃ


ம. ஸ்ரீகந்தராஜ்,
அல்வாய் வடக்கு.

கே: தமிழரசுக் கட்சி ஒரு போதும் தமிழ்ப் பல்கலைக் கழகம் கோரவில்லையென ஒரு வாராந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளதே?

ப: முழுப் பூசனிக்காயை பிடி சோற்றில் மறைக்கும் அந்த ஏடு எப்பொழுதாவது உண்மையை கூறியதுண்டா?

கே: யாழ் அகற்றுச் சங்கத் தலைவரான வவுனியா எம். பி. நெடுந்தீவு மக்களுக்காக முதலைக்கண்ணீர் வடித்திருப்பதன் நோக்கம் என்னவோ?

ப: நெடுந்தீவிலும் ஒரு யாழகற்றிச் சங்கத்தை நிறுவும் நோக்கமாக இருக்கலாம்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாய் வாலை ஆட்டலாம்! வால் நாயை ஆட்டுவதா?

## தனிச் சிங்களத்தின் வேகத்தை தடுத்து நிறுத்தியது தமிழரசே!

"திரு. ஜீ.ஜீ. பொன்னம்பலம் சில காலமாக என்னைப்பற்றியும் எமது கட்சியைப் பற்றியும் நாட்டில் சில பொய்ப்பிரசாரங்களை நடத்திவருகிருர். அவற்றை மறுக்கவேண்டியதும், தமிழ் மக்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறுவதும் எனது கடமையென்று கருதுகிறேன்.

1948-ம் ஆண்டு தான் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டு டி. எஸ். சேனநாயகாவுடன் சேர்ந்தபோது நான அதை ஏற்றுக்கொண்டதாக அவர் கூறுகிருர். இதைவிடப் பெரிய பொய் கிடையாது.

1948-ம் ஆண்டிலே டி.எஸ். செனநாயகாவுடன் சேருவதை முன்னிட்டு திரு. பொன்னம்பலம் தடுமாறுவதைக் கண்டு அவர் சேருவதை முற்ருய் எதிர்த்தவன் நான்.

அன்று தொடங்கிநாங்கள் ஒருவரும் டி. எஸ். சேனநாயகாவுடன் சேர வேண்டாமென்று ஒரே பிடியாகப் பிடித்து நின்றவன் நான். ஒரு நாள் அமைச்சர் பதவி ஏற்க வேண்டுமென்று பாராளுமன்றக் குழுவில் திரு. பொன்னம்பலம் கொண்டுவந்த தீர்மானத்தை நான் முற்ருக

### முற்ற வெளிக் கூட்டத்தில்

அந்த நாட்களில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நான் ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தினுல். தான் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வதாகத் திரு. பொன்னம்பலம் கூறிஞர்.

20 ஆண்டுகளுக்குமுன் நடந்த இந்த உண்மையை தமிழ்மக்கள மறந்திருப்பார்கள் என்று நினைத்து இன்று இப்பொய்யைத் திரு. பொன்னம்பலம் கூறுவது ஆச்சரியமல்ல.

ஒரு பொய்யைத்திரும்பத் திரும்பச் சொன்னுல் அது மெய்யாகும் என்ற கோயபல்ஸின் பிரசாரத் தந்திரத்தை அவர் கையாளுகிருர் போலும். கோயபல்ஸ் கட்டியெழுப்பிய பொய்களெல்லாம் எப்படி முடிந்தன என்பது மக்களுக்குத் தெரியும்.

அப்படியே திரு: பொன்னம்பலம் கட்டி எழுப்பும் பொய்களும் முடியும்.

அந்த முற்றவெளிக் கூட்டத்தில் பாராளுமன்றக் குழுவின் பெரும்பான்மை முடிவை ஏற்றுக்கொண்டு அரசாங்கத்தோடு சேருவதை நான் ஆதரித்துப்பேசியது உண்மை. ஆனுல் எமது கொள்கைகளுக்கு மாருன எந்தச்செயலையும் அரசாங்கம் மேற்கொண்டால் உடனே வெளியேறுவதற்கு இராஜிஞமாப் பத்திரங்கள் சட்டைப்பையில் தயாராக இருக்கின்றன என்று அக்கூட்டத்தில் பேசிய பாராளுமன்ற உறுப்பினர் வலியுறுத்திக் கூறியதை திரு. பொன்னம்பலம் மறந்துவிட்டார் போலும்.

எமது கொள்கைக்கு முரணுன இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமை மசோதா வந்தபோது அவரை அமைச்சர் பதவியை இராஜிஞமாச் செய்து அம்மசோதாவை எதிர்க்கும் படி கேட்டேன். திரு. பொன்னம்பலம் அதற்கு மறுத்து அம்மசோதாவை ஆதரிக்கும் கோலம் கொண்டார்.

### வாக்குறுதி

1947ம் ஆண்டுத் தேர்தலுக்கு முன்பு 16.7.1947ல் திரு. பொன்னம்பலம் இலங்கை இந்திய காங்கிரஸிற்கு தமது கையெழுத்திட்டு ஒரு வாக்குறுதி கொடுத்திருந்தார். இந்த வாக்குறுதியை இலங்கை இந்திய காங்கிரஸ் 1. 1 1949ம் ஆண்டு அச்சிட்டு வெளியிட்டது.

அந்த வாக்குறுதியில் 5ஆண்டு வாசகால யோக்ய தாம்சம் உள்ளவர்கள் எல்லோருக்கும் பிரஜாவுரிமை வழங்கப் படவேண்டும் என்றும், அத்தகுதியற்றவர்கள் அத்தகுதியைப் பெற்றபின் அவர்களுக்கும்பிரஜாவுரிமை வழங்கப் படவேண்டும் என்றும் இலங்கை இந்தியக் காங்கிரஸினுடைய இந்தக்கோரிக்கையை தான் பரிபூரணமாக ஆதரிப்பேன் என்றும் உறுதியளித்திருந்தார்.

அரசாங்கம் கொண்டுவந்த இந்திய-பாகிஸ்தானிய பிரஜாஉரிமை மசோதா இந்த வாக்குறுதிக்கு முற்றிலும் முரண்பட்டதாகும்.

### எதிர்த்தேன்

எமது கொள்கைப்படி அம்மசோதாவை எதிர்த்து நான் பேசினேன். மசோதாவை ஆதரித்த திரு. பொன்னம்பலம் அந்த நேரத்தில் ஒன்றும் பேசாமல் இருந்தார். அந்த நேரத்தில் பேச முன்வராதவிடயத்தை 20ஆண்டுகளுக்குப்பின் இன்று பேசுகிருர். அன்று நடந்தவற்றை எல்லாம் மக்கள் மறந்துவிட்டார்கள் என்று அவர் நினைக்கின்ருர் போலும்.

இலங்கை இந்திய ஒப்பந்த அமுல் மசோதாவை திரு பொன்னம்பலமும் சேர்ந்து ஆதரித்துவிட்டு நாங்கள் மட்டும்தான் ஆதரித்தோம் என்ற தோறணையில் அறிக்கைவிடுவது விசித்திரமாய் இருக்கின்றது. திரு. பொன்னம்பலம் ஆதரித்த இந்திய பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டத்திஞல் நாடற்றவர் ஆக்கப்பட்ட தமிழ்மக்களில் ஒருபகுதியனராவது பிரஜாவுரிமை பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் சட்டம் என்றகாரணத்திஞலும், வலுக்கட்டாயம் இல்லாமல் விருப்பத்தின்பேரில் செல்பவர்களே இந்தியாவுக்கு அனுப்பப் படுவார்கள் என்ற காரணத்திஞலும், மலைநாட்டுத் தமிழ் மக்களின் ஸ்தாபனங்கள் எல்லாம் ஆதரித்ததிஞலும் நாம் இலங்கை-இந்திய ஒப்பந்த அமுல் மசோ தாவை ஆதரித்தோம்.

திரு. பொன்னம்பலம் ஆதரித்த இந்திய-பாகிஸ்தானிய பிரஜாவுரிமை மசோதாவை மலைநாட்டுத் தமிழ் மக்களின் ஸ்தாபனமாகிய இலங்கை-இந்தியக் காங்கிரஸ் முற்ருக எதிர்த்துநின்ற தென்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

### நாம் செய்தவை

சென்ற இருபது ஆண்டு காலமாக நாம் அரசியலில் ஒன்றும் செய்யாமல் இருந்தோமென்று கூறுகிருர்.

தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், அண்மைக் காலமாக தமிழரக்கட்சி பற்றியும், திரு. செல்வநாயகத்தின் கடந்த கால அரசியல் வாழ்வு பற்றியும், பத்திரிகைகளிலும், பொதுக்கூட்டங்களிலும் நடத்தி வரும் கோயபல்ஸ் பிரசாரங்களை இவ்வறிக்கை மூலம் தூள்தூளாக்குகிருர், தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம். திரு செல்வநாயகத்தின் பதிலை முழுமையாக இங்கு சுதந்திரன் வாசகர்களுக்கு தருகிறேம்.

தனிச் சிங்களச் சட்டத்திற்கு விரோதமாக நாங்கள் நடத்திய எதிர்ப்பை அடக்குவதற்காக இரண்டு முறை அவசரகாலச் சட்டத்தைக் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் அவ்வப்பொழுதிருந்த அரசாங்கங்களுக்கு ஏற்பட்டது.

எமது கட்சிப் பிரமுகர்கள் மாதக்கணக்காக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தார்கள்.

அதைவிட 1961ம் ஆண்டு கிட்டத்தட்ட 2மாதங்களாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கமே ஸ்தம்பித்துப் போனதென்று அன்றைய பிரதமரே கூறக்கூடியதாக எமது சத்தியாக்கிரக இயக்கம் நடைபெற்றது

எமது எதிர்ப்புகளின் பலனுகத்தான் பண்டாரநாயகா தமிழ் மொழி (விசேட பாவிப்பு) சட்டத்தைக் கொண்டு வந்தார்.

1961ம் ஆண்டு நாம் நடத்திய சத்தியாக்கிரகத்தின் பலனுகத்தான் தனிச் சிங்களத் திணிப்பு வடக்கு கிழக்கு, மாகாணங்களில் நிறுத்தப்பட்டது:

1965ம் ஆண்டு தேசிய அரசாங்கத்தோடு நாம் செய்த ஒழுங்கின்படி தான் தமிழ் மொழிச் சட்டவிதிகள் ஆக்கப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்களத்தோடு தமிழுக்குச் சம உரிமை சட்டபூர்வமாக அளிக்கப்பட்டிருக்கிறது.

### குடி யேற்றம்

திரு: பொன்னம்பலம் அமைச்சராக இருந்த காலத்தில் அல்லை, கந்தளாய், கல்லோயாக் குடியேற்றத் திட்டங்களில் எமது பாரம்பரிய பூமி அரசாங்கத்தின் திட்டமிட்ட குடியேற்றங்களிஞல் அபகரிக்கப்பட்டது.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் பற்றியும் திரு: பொன்னம்பலம் கூறயதை மறுக்க வேண்டியிருக்கிறது.

சில மாதங்களுக்கு முன் பிரதமர் டட்லி சேனநாயகா பாராளுமன்றத்தில் பேசும் போது, தான் விவசாய அமைச்சராகவும், பிரதம மந்திரியாகவும் இருந்த காலங்களில்தான் அல்லை, கந்தளாய் கல்லோயாக் குடியேற்றங்களை நடத்தினேன் என்று பெருமை பாராட்டினர்.

அவர் விவசாய அமைச்சராக இருந்தகாலம் 1947 தொடக்கம் 1952வரை, பிரதம மந்திரியாக இருந்த காலம் 1952 தொடக்கம் 1953 வரைக்கும். இக் காலங்களில்தான் கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் நடாத்தப்பட்டன.

திரு. பொன்னம்பலம் அமைச்சராக இருந்த காலம் 1948 தொடக்கம் 1953 வரைக்கும். எனவே திரு. பொன்னம்பலம் அமைச்சரவையில் இருந்த காலத்லேதியே இக் குடியேற்றங்கள் நடைபெற்றன என்பது தெளிவு.

### உரிமைகள் நிலைநாட்டப் பட்டன

அந்தக் காலத்தில் எமது கட்சிபலம் வாய்ந்ததாக இருக்கவில்லை. 1956க்குப் பின் குடியேற்றப்பட்ட கல்லோயா 38வது யூனிற், திருகோணமலை முதலிக்குளம் ஆகிய திட்டங்களில் தமிழ் மக்களின் உரிமைகள் நிலைநாட்டப் பட்டன என்பதை எடுத்துக் கூற வேண்டியிருக்கிறது.

இந்த நேரத்தில் நாம் எதிர்க் கட்சியில்தான் இருந்தோம், அப்படியிருந்தும் நாம் எமது பிரதேசத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கத் தவறவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எமது பாரம்பரியமான பிரதேசத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்தை தடுக்க தமது அரசியல் வாழ்வில் திரு. பொன்னம்பலம் எந்த நடவடிக்கையும் எடுத்தது கிடையாது என்று நான் கருதுகிறேன்.

நான் திரு. டி.எஸ். சேனநாயகா அமைச்சரவையில் சேர ஆவல் கொண்டிருந்தேன் என்று திரு. பொன்னம்பலம் சமீபத்தில் பாராளுமன்றத்தில் நடைபெற்ற மாவட்ட சபை வெள்ளை அறிக்கை விவாதத்தின் போது

(9-ம் பக்கம் பார்க்க)


29 வருடங்கள் அனுபவம்



கல்வித் திறன், தெய்வ பலன், மந்திரபலன், கைத்திறன் உறுதி அளிப்பதற்காக கணவன்-மனைவி இருசாராருக்கும் கட்டணம் இல்லாமல் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்.

சரியானதற்கு பிறகுதான் விரும்பிக் கொடுக்கும் காணிக்கை ஏற்றுக்கொள்ளப்படும்.

தொழில் கிடைப்பதற்கு வேளாண்மை,வர்த்தகம், வியாபாரம் முன்னேற, காதல் அன்பு நிலைத்திருக்க, விலகி நிற்பவர்களை சேர்த்துக்கொள்ள, அதிர்ஷ்டமான திருமணம் நடைபெற, வேண்டாதவர்களை விலக்கி வேண்டியவர்களை வசப்படுத்திக் கொள்ள, கணவன் மனைவி பிணக்குகள் நீங்கிவிட, சந்தேகம் மதுபானம், சூதாட்டம் இவைகளில் நின்றும் தவிர்த்துக்கொள்ள, குழந்தைகளின் கல்வி முன்னேற, வழக்கு தொல்லைகளில் நின்று தவிர்த்து வெற்றி அடைய, விரோதிகளுக்கு பழியடித்து தண்டனை பெறவைக்க, கொடியவாகளை அடக்கிவிட, உழைப்பதை சேமித்துவிட, குடும்பத்தின் ஒற்றுமைக்கும் ஆவல்களுக்கும் எல்லா காரணங்களுக்கும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும். இரகசியங்களை வெளியிட மாட்டோம்.

விபரங்களுக்கு எழுதுங்கள்.

சந்திப்பு: ஞாயிறு-திங்கள் இரு நாட்களில் கம்பளையிலும் செவ்வாய் முதல் சனிக்கிழமை வரை கொழும்பிலும் சந்திக்கலாம்.

103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு.
(மருதானை, மத்திய மகா வித்தியாலயத்துக்கெதிரில்)

மஹா மாந்திரீக கலாநிதி

பீ. எம். திசாநாயக,

(அரசாங்கப் பதிவு செய்யப்பட்ட மாந்திரீக வைத்தியர்)

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா

தலைமைக் காரியாலயம்: கம்பளை, போன்: 454.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலை கடலென திருமலையில் திரண்ட செந்தமிழர் கூட்டம்!

## கோணேசர் கோவிலையும் கோட்டையையும் புனித நகராக்கும்படி ஆட்சியை கோரியது!

"திருமலையிலமைந்துள்ள கோணேசராலயம் இந்துக்களின் பழம் பெரும் வழிபாட்டுத்தலமாகும். வரலாற்றுக்கு முற்பட்ட காலம்தொட்டு இந்துக்களின் திருத்தலமாக இது இருந்துவந்திருக்கிறது. இந்த ஆலயத்தையும் அதைச் சார்ந்த பிரெடெரிக் கோட்டையையும் புனித நகராகப் பிரகடனம் செய்ய உடன் நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்கத்தை கோருகிறோம்."—

கோவில் அமைந்துள்ள திருமலை பிரெடெரிக் கோட்டையை புனித நகராக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையை பௌத்த பிக்கு ஒருவரின் எதிர்ப்பைக்கண்டவுடன் நிறுத்திவைத்த பிரதமரின் தான்தோன்றித்தனமான செயலைக் கண்டிப்பதற்கும் உடனடியாக கோணேசராலயம் அமைந்துள்ள பிரெடெரிக் கோட்டையை புனித நகராக்கும்படி அரசாங்கத்தை வற்புறுத்தவும் இம்மாபெரும் கண்டனக் கூட்டத்தை திருமலை குளக்கோட்டன் இந்து இளைஞர்மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

துரைரத்தினம் டாக்டர்சிவானந்தன் கோணேஸ்வர ஆலய பரிபாலன செயலாளர் திரு. நேமிநாதன், மூதவை உறுப்பினர்களான திரு. நடேசன், திரு. சு. நடராசா, திரு. சரவணமுத்து ஆகியோரும் ஊர்வலத்தினருடன் நடந்து வந்தனர்.

திருஞான சம்பந்தர் கோணமாமலை நாதர் மேல் பாடிய தேவார திருப்பதிகளைப் பாடிக்கொண்டு புறப்பட்ட ஊர்வலம், கடற்கரை வீதி, டொக்யார்ட் வீதி, ஊடாக சென்று பத்திர காளி ஆலயத்தை வீதிவலம்

வேண்டும் என்று பிரதம மந்திரி நினைத்தால் யாழ்ப்பாணக் கோட்டை மறியல் சாலையாகவும், காலியில் வெற்றிடமாகவும் மன்னாரில் வெறும் இடமாகவும் கிடக்கும் போது திருக்கோணமலையிலுள்ள கோட்டை மட்டுமே இலங்கைத் தீவுக்குப் பாதுகாப்பான அரண் என்றால் இதை யார்தான் நம்புவார்கள்?

இராணுவ வீரர் நான்கு பத்து பேர் இலங்கையைக் காப்பாற்றவில்லை. இங்கு வாழும் மான் இனங்களைக் கொன்று தின்றும் வேறு

என்னென்னவோ வெல்லாம் புரிந்துவருகிறார்கள்.

அங்கு இராணுவத்தினர் சிலர் கோணஸ்வரர் ஆலயம் பற்றி யாழ்ப்பாண மக்களுக்கும், வவுனியா மக்களுக்கும் உரிமை கோரிவாதாடுகின்றனர் என்று ஒரு சிலர் இங்கு துவேஷசத்தை பரப்புகின்றார்கள் என்பது கேட்டு வேதனையுடன் வெட்கித் தலைகுனிகிறேன்.

திருக்கோணேஸ்வரத்தின் பெருமைகளை இராமேஸ்வரத்தில் நின்று திருஞான சம்பந்தர் பாடியிருக்கின்

(8-ம் பக்கம் பார்க்க)

# கோணமலை காணாத கண் என்ன கண்ணே! கும்பிட்டு நில்லாத கையென்ன கையே!!

செப்டம்பர் 29-ம் திகதி திருமலை பெரிய முற்றவெளியில் அலைகடலென கூடிய இந்துக்களின் பிரமாண்டமான கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் படிக்கப்பட்டபோது, அதை ஆமோதிப்பதுபோல எழுந்த கையொலி அடங்க வெகுநேரமாயிற்று.

கோணேஸ்வர ஆலயப் புனிதநகர்ப் பிரச்சினையை எவ்வளவு தூரம் தங்கள் உயிர்ப் பிரச்சினையாக இந்நாட்டு இந்துப் பெருமக்கள் கருதிவருகிறார்கள் என்பதை திருமலையில் திரண்ட இந்துக்களின் 10,000-க்கு மேற்பட்ட சன சமுத்திரம் துலாம்பரமாக எடுத்துக்காட்டியது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய திரு. திருச்செல்வம் கியூ. சி., 20 இலட்சம் இந்துக்களின் கோரிக்கையை புறக்கணித்துவிட்டு எந்த அரசாங்கமும் இந்த நாட்டை ஆள முடியாதென்றும் இந்துக்கள் ஏமாளிகள் அல்லர் என்றும் எச்சரித்தார். சைவ மக்கள் இரண்டாம் பிரஜையாக்கப்படுவதை ஒரு போதுமே சகித்துக் கொள்ளமாட்டார்கள்என்றும் அவர் முழங்கினார்.

இக்கூட்டத்தில் அரசாங்கத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் ஒரேயொரு கட்சியான தமிழ்காங்கிரஸ்எம். பி.க்கள் கலந்துகொள்ள இறுதி நேரத்தில் மறுத்துவிட்டது குறிப்பிடத்தக்கது:

5000 ஆண்டுகட்கு முற்பட்டதும் வரலாற்றுப் புகழ் பெற்றதுமான கோணேசர்

### மாபெரும் ஊர்வலம்

திருமலையின் அண்மைக் கால வரலாறே கண்டிராத மிகப் பிரமாண்டமான முறையில் ஊர்வலமும் பொதுக்கூட்டமும் அமைந்திருந்தது. ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் கலந்துகொண்ட மக்கள் கூட்டம் உணர்ச்சிவசப்பட்டு காணப்பட்டது. ஆனால் எந்த நிலையிலும் அமைதிக்கு பாதகமேற்படும் . சூழ்நிலை ஏற்படவில்லை.

ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்துகொண்ட திரளான தமிழர்கள் மிகுந்து கட்டுப்பாட்டுடனும் நடந்து கொண்டனர்.

கோணேஸ்வர ஆலயத்தில் நடைபெற்ற விசேட ஆராதனையுடன் ஊர்வலம் பி. ப. 3 மணிக்கு ஆரம்பமாகியது. கோவில் குருக்கள் கோணேசப் பெருமானின் படத்தையும், நிறைகுடத்தையும் திருமலை பா. உ. திரு. மாணிக்கராஜா, நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் சிவானந்தன், சரஸ்வதி சச்சிதானந்த மாதாஜி, ஆகியோரிடம் கையளித்தார்.

அதன்பின் கோயில் பிரகாரத்திலிருந்து பிரமாண்டமான ஊர்வலம் ஆரம்பமாகியது. ஊர்வலத்தில் ஏறத்தாழ 5000க்கு அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தின் முன்னே குளக்கோட்டன் சிவலிங்கத்தை வணங்கும் சிலை ஒன்று அலங்கரிக்கப்பட்டு திறந்தமோட்டார் ரதத்தில் எடுத்துவரப்பட்டது. அத்துடன், இராவணன், மனுநீதி கண்ட சோழன், கஜபாகு ஆகியோரின் சிலைகளும் எடுத்துவரப்பட்டன.

சரஸ்வதி சச்சிதானந்த மாதாஜி, வட்டுக்கோட்டை எம். பி, திரு. அ. அமிர்தலிங்கம், திரு[illegible] திரு. மாணிக்கராசா, பருத்தித்துறை எம். பி. திரு.

வந்து பெரிய முற்றவெளி மைதானத்தையடைந்தது.

பெரிய முற்றவெளி மைதானத்தில் சுமார் பத்தாயிரம் மக்கள் திரண்டிருந்தனர். கூட்டத்துக்கு தம்பலகாமம் கோணேஸ்வர ஆலய தர்மகர்த்தா சபை தலைவர் திரு. சரவணமுத்து தலைமை வகித்தார்.

### துரைரத்தினம் சவால்

கூட்டத்தில் திரு. க. துரைரத்தினம் பேசும்போது கூறியதாவது:

'சரித்திரம் கற்றவர்கள் என்று தம்பட்டம் அடிக்கும் சில பேராசிரியர்கள் பிழையான சரித்திரச் சான்றுகளைத் தருகின்றனர். அதிகமாக மகாவம்சம், சூலவம்சம் போன்றவற்றிலிருந்தே இவை பெறப்படுகின்றன.

2-3-ம், நூற்றாண்டுகளிடையே மகாசேனன் கிழக்கிலே கட்டுவித்த 'கலவேவா' என்னும் ஆறு 'கோக்கனன் ஆறு' என்று அழைக்கப்பட்டுவந்தது.


இந்த ஆற்றின் மேற்குப் பக்கத்தில் அமைந்திருப்பதே கோக்கன்னன் தேவாலயம். இப்படி மகாவம்சமே கூறுகிறது.

இந்தக் கூற்றுப் பொய் என்றால் மகாவம்சம் பொய் என்று பௌத்தர்கள் ஒப்புக்கொள்வார்களா? இது பற்றி வாதாட வேறு என்ன சான்று வேண்டிக் கிடக்கின்றது. இதுபற்றி நான் எந்தப் பௌத்த மதப் பிரமுகர்களுடனும் வாதாடத்தயாராக இருக்கிறேன் என்று இப்போதே சவால் விடுகிறேன்'

வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

[illegible] இலங்கைக்குப் பாதுகாப்புத்தேட


உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்கவும், வெளிநாட்டு செலாவணியை சேமிக்கவும் பாவியுங்கள்.




ராஜபீடி 'ஸ்பெஸல'

போலிகளை வாங்கி ஏமாறாதிருக்க நம்பிக்கையான வியாபாரிகளிடம் இருந்து அசல்

ராஜ பீடியை

வாங்குங்கள்

ராஜா பீடி கம்பெனி,
கொழும்பு-14.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஒற்றுமை ஏற்பட வழியென்ன?

கடந்த சில வாரங்களாக ஒற்றுமை, ஐக்கியம்ஐக்கிய முன்னணி போன்ற சொற்கள் இந்நாட்டுத் தினசரிகளில்—குறிப்பாக தமிழ்த் தினசரிகளில் தாராளமாக அடிபட்டுவருகின்றன. தமிழ் பேசும் மககளின் ஒற்றுமையை கெடுத்துவரும் பொன்னம்பலம்கூட ஒவ்வொரு கூட்டத்திலும் தமிழரசுக்கட்சி மீது வசைமாரி பொழிந்துவிட்டு அதே வாயால் ஒற்றுமைபற்றியும் நல்ல பிள்ளை போலப் பேசிவருகிறார்.

திட்டவட்டமான கொள்கை, இலட்சியங்களுடைய தமிழரசுக்கட்சிக்கும் எதுவித கொள்கையுமற்ற (தமிழ் இனத்தின் நன்மைக்காக தமிழரசார் எடுக்கும் முயற்சிகளுக்கெல்லாம் கல்லுக்குத்தும் ஒரேயொரு கொள்கை தவிர) தமிழ் காங்கிரசுக்கும் இடையே இணைப்பு ஏற்படுத்த சில கொழும்புத் தமிழ்ப் பிரமுகர்கள் முயற்சியெடுத்து வருவதாக செய்திகள் வெளியிட்டு வருகின்றன தினசரிகள். சில தமிழ் தினசரிகள் அதை ஆதரித்து தலையங்கம் வேறு தீட்டியுள்ளன.

இந்நாட்டுத் தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையான கோணேஸ்வர புனித நகர்ப்பிரச்சினையை ஆதரித்தும், நியாயமான அக்கோரிக்கையை ஏற்றுக் கொள்ளும்படியும் அரசாங்கத்துக்கு இடித்துக் கூறவும் திராணியற்ற இந்நாட்டுத்தமிழ் தினசரிகள்—பண்டாரநாயகாவைப் பற்றி பக்கம் பக்கமாக கட்டுரைகளும் ஆசிரியத்தலையங்கங்களும் தீட்டிவிட்டு, இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் இதய சிம்மாசனங்களில் கொலு வீற்றிருக்கும் அமரர் வன்னிய சிங்கம் பற்றி அன்னாரது நினைவு நாளில் ஒரு குறிப்புக்கூட வெளியிட வக்கற்ற தினசரிகள்—தமிழ் பேசும் மக்களுக்காகவடிக்கும் முதலைக் கண்ணீரைக் கண்டு அழுவதா சிரிப்பதா? என்று தெரியவில்லை.

தமிழ்த் தினசரிகள் அழுது கண்ணீர்வடிப்பதெல்லாம் தமிழ் காங்கிரஸ்—தமிழரசு இணைப்புக்காகவே தவிர தமிழ் பேசும் பொது மக்களின் ஐக்கியத்துக்காகவல்ல என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற முதுமொழி நமக்கு நன்றாகத் தெரியும். தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் பலப்படுத்தக் கூடிய முயற்சியில் யார் ஈடுபட்டாலும் நாம் அதை வரவேற்கிறோம். ஆனால் இரு அரசியல் கட்சிகளை ஒன்றாக இணைப்பதால் அந்த ஐக்கியம் ஒரு போதுமே ஏற்பட்டு விடமுடியாது என்பது எமது உறுதியான நம்பிக்கை.

இற்றைக்கு 12 ஆண்டுகளுக்குமுன் தமிழ் பேசும் மக்கள் எந்த நிலையில் இருந்தார்கள் என்பதையும் 1956ம் ஆண்டுக்கு பின் எப்படி ஒற்றுமைப்பட்டார்கள் என்பதையும் சிறிது எண்ணிப்பார்த்தால், ஒற்றுமை எப்படி ஏற்பட முடியும் என்ற கேள்விக்கு பதில் கிடைக்கும்.

1956ம் ஆண்டுக்குமுன், வடக்கும் கிழக்கும் மலை நாடும், பிரதேச, மத வேறுபாடுகளால் பிரிந்து பிளவுபட்டு நெல்லிக்காய் மூடையாக தோற்றமளித்தது.

தமது சுயநலத்திற்காக எட்டப்பர்களும் இனத்துரோகிகளும் பிரதேசப்பிரிவினை வாதத்துக்கு நீரூற்றி வளர்த்து வந்தனர். சின்னாபின்னப்பட்டுக் கிடந்த தமிழ் பேசும் மக்களைப் பகடைக்காய்களாக்கி அரசியல் எத்தர்கள் சுகபோகமனுவித்துவந்தனர்.

இந்த நிலையிற்றான் 1956ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் வந்தது. அந்தத் தேர்தல் தமிழ் பேசும் மக்களிடையே ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. அவர்களிடையே இருந்து வந்த பிரதேச, மத, சாதிப் பூசல்களுக்கு சாவுமணியடித்தது இத்தேர்தல். வடக்கு கிழக்கிலுள்ள பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்கள் ஒரே இலட்சிய உணர்வினால்—கொள்கைப்பற்றினால் ஐக்கியப்பட்டு ஒரே தலைவனின் கீழ் ஒன்று திரண்டனர். ஆம், தமிழரசுக் கட்சிக் கொடியின் கீழ் ஒற்றுமைப்பட்டனர்.

அன்று ஏற்பட்ட ஒற்றுமை மேலும் மேலும் வலுவடைந்து வந்ததை அதற்குப் பின் நடைபெற்ற மூன்று பொதுத் தேர்தல்களும் திருமலை யாத்திரை, சத்தியாக்கிரகம் போன்றவையும் திட்டவட்டமாக உணர்த்தி விட்டன. சமஷ்டி இலட்சியத்தை தங்கள் உயிர் மூச்சாகவும் தமிழரசுக்கட்சியை தங்கள் பிரதிநிதித்துவஸ்தாபனமாகவும் ஏற்றுக் கொண்டு விட்டனர் இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்கள்.

ஆகவே ஒற்றுமை என்பது ஒரு இலட்சியத்தை முன்வைத்துகொள்கைரீதியில்ஏற்படவேண்டும்என்ற உயர்ந்தஅரசியல் தத்துவத்தை நான்குபொதுத்தேர்தல்களில் அளித்த தீர்ப்பின்மூலம் தமிழ் பேசும் மக்கள் தெளிவாக உணர்த்திவிட்டனர்.

இந்த நிலையில் திரு. பொன்னம்பலமும் சரி, வேறு யாராயினும் சரி, தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையை அந்தரங்க சுத்தியுடன் விரும்பினால், மக்கள் காட்டிய முன்மாதிரியைப் பின்பற்றி தமிழரசுக் கட்சியின்கீழ் ஒன்று திரளுவதே அதற்குரிய ஒரே வழியாகும். அதை விடுத்து அரசியல் லாபம்பெறும் நோக்குடன் ஒற்றுமை என்ற பெயரால் குட்டை குழப்ப முயல்வது தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கும் மாபெரும் துரோகமாகும்.

# படிப்பது தேவாரம்- இடிப்பது சிவன்கோவிலா?

படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் என்று தமிழில் ஒரு பழமொழியுண்டு. இந்தப் பழமொழிக்கு உதாரண புருஷராக பிரதமர் திரு. டட்லி சேனநாயகா விளங்குவதற்கு உள்ளூர ஆசைப்படுகிறார் என்பதையே அவரது அண்மைக்கால நடவடிக்கைகள் உணர்த்தி வருகின்றன.

மேடைகளில் ஏறி நின்று சண்டமாருதமாக தேசிய ஒற்றுமை பற்றி வாய் கிழியப் பேசும் பிரதமர் செயலில் அதை எவ்வளவு தூரம் கடைப் பிடிக்கிறார் என்பதே கேள்விக்குரிய விஷயம். பிரதமர் எடுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கு பதில் அதைச் சிதறடிப்பதாகவேயிருக்கிறது.

### வயிற்றிலடிக்க திட்டம்

இந்த நாட்டுத் தமிழ் பேசும் மக்களின் மனதிலே மாவட்ட சபைகளை வழங்குவதாகக் கூறி நம்பிக்கையை வளர்த்து விட்டு, ஈற்றில் சிங்களத் தீவிரவாதிகளிடம் சரணடைந்தார்.

கோணேஸ்வர ஆலயத்தையும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளையும் புனித நகராக்க சம்மதித்து விட்டு, ஒரு பௌத்தபிக்குவுக்கு அஞ்சி, அத்திட்டத்தை நிறுத்தும்படி உத்தரவிட்டார்.

இப்பொழுது சிங்களம் படிக்காதவர்களும், சிங்களத்தில் சித்தியடையாதவர்களுமான புதிய அரசாங்க ஊழியர்கள் 800 பேருக்கு சீட்டுக் கிழிக்கும்படி உத்தரவிட்டுள்ளதாக செய்தி வந்திருக்கிறது.

### ஆஷாடபூதியா?

வாயால் தேனொழுக பாலொழுகதேசிய ஒற்றுமை பேசும் பிரதமர் தமிழ் சமுதாயத்தில் பிறந்துவிட்டகுற்றத்திற்காக—800 தமிழர்களை அரசாங்க ஊழியத்திலிருந்து வெளியேற்ற உத்தரவிட்டாரென்றால் பிரதமர் வெறும் ஆஷாடபூதிதானா என்று தான் அகில உலகமும் கேட்கும்,

(9-ம் பக்கம் பார்க்க)

# செக்கோஸ்லவேக்கியாவும் சமஷ்டியை பின்பற்றுகிறது

1948-ம் ஆண்டு ஐம்பதுக்கு ஐம்பது கொள்கையை கைவிட்டு யூ.என்.பி.யிடம் சரணாகதியடைந்த பின்னர் இன்றுவரை திரு. பொன்னம்பலத்திடம் எந்தவிதமான கொள்கையோ திட்டமோ கிடையாது. தமிழ் மக்களுக்கு தொல்லைகளும் கஷ்டங்களும் அதிகரிக்கத் தொடங்கிய 1956-ம் ஆண்டிலிருந்து இன்றுவரை திரு. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சி அல்லும் பகலும் விடா முயற்சியுடன் உழைத்துக் கட்டியெழுப்பிய தமிழ் மக்களின் ஐக்கியக் கோட்டையை உடைத்துவிடவே படாதபாடுபட்டு வருகிறார். அப்படிப்பட்டவர் இன்று ஒற்றுமை பேசுவதும், அதற்கு சில தினசரிகள் வக்காலத்து வாங்குவதும் வெறும் கபடநாடகம் என்பதே எமது கருத்து.

1956-ம் ஆண்டுக்குப்பின் தமிழ் மக்கள் தமிழ் காங்கிரஸ் கட்சியை தங்கள் கட்சியாக ஒருபோதுமே அங்கீகரிக்கவில்லை. 1956-ம், ஆண்டுத் தேர்தலில் ஒரேயொருவரும், 1960 மார்ச், ஜூலைத் தேர்தல்களிலும் ஒவ்வொருவருமே தமிழ் காங்கிரசில் வெற்றிபெற முடிந்தது. 1960-ல் நடைபெற்ற இரு தேர்தல்களிலும் திரு. பொன்னம்பலமே மண் கவ்வினார். 1965 தேர்தலில் மூவர் வெற்றிபெற்றாலும் கிழக்கு மாகாணத்திலிருந்து ஒருவர்கூட தெரிவுசெய்யப்படவில்லை.

**இவற்றையெல்லாம் ஏன் இங்கு குறிப்பிடுகிறோமென்றால் தமிழ் காங்கிரஸ் தமிழ் மக்களால் ஒதுக்கப்பட்ட நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சியென்பதை எடுத்து விளக்குவதற்கே. எனவே தமிழினத்தால் தொடர்ச்சியாக வெறுத்தொதுக்கப்பட்ட துரோகிகளை ஐக்கிய முன்னணி என்ற லேபலில் மீண்டும் 'தலைவர்களாக்கி' தமிழ் மக்களிடையே திணிப்பதற்கு நடக்கும் முயற்சியை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அத்தகைய முயற்சி தமிழ்பேசும் மக்கள் அளித்துவந்துள்ள தீர்ப்புக்கு எதிரானதாகும்.**

பாரதத்தில், அண்ணல் மகாத்மா காந்தி வெள்ளை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அறப்போர் நடத்தியபோது அங்கு இருந்த பல்வேறு கட்சிகளையும் அழைத்து ஐக்கிய முன்னணியொன்றை அமைக்க கனவிலும் கருதவில்லை. தமக்கு சரியென்றுபட்ட பாதையிலே சென்றார். பாரத மக்களும் தங்களுக்கு வழிகாட்டக்கூடிய தலைவர் காந்திஜியே என்பதைக் கண்டு கொண்டு அவரைப் பின்பற்றி சுதந்திரப் போரில் வெற்றியீட்டினார்கள்.

அதேபோல ஐரிஷ் சுதந்திரப் போராட்டத்தையும் 'சின்பீன்' என்ற இயக்கம்தான் முன் நின்று நடத்தியது. மக்கள் அதன்பின்னால் திரண்டனர். அங்கு யாரும் அரசியற் கட்சிகளை ஒன்றுசேர்க்க முயற்சித்தது கிடையாது.

ஈழத்திலும் தங்களுக்கு வழிகாட்டக்கூடிய இயக்கம் எதுவென்பதை தமிழ் பேசும் மக்கள் கடந்த 4 பொதுத்தேர்தல்களில் தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். தங்கள் தீர்ப்புக்குமாறாக—தமிழ் ஒற்றுமையை கெடுத்து வருபவர்களுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் சரியான பாடம் கற்பிப்பார்கள். அந்த சனநாயக உரிமையை தமிழ் பேசும் மக்களிடமிருந்து பறிப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது.

ஆகவே தமிழ்பேசும் மக்களின் ஒற்றுமையை அந்தரங்கசுத்தியாக விரும்பும் நல்லவர்கள்—கொள்கையற்ற பொன்னம்பலத்துக்கும், திட்டவட்டமான தெளிவான கொள்கை இலட்சியங்களுடைய தமிழரசுக் கட்சிக்கும் முடிச்சுப்போட முயற்சி செய்வதை விடுத்துதமிழ்பொதுமக்களிடமுள்ளபிரதேச,மத வேறுபாடுகளை முற்றாக களைந்தெறிவதில் தங்கள் சக்தியை செலவுசெய்ய முன்வரவேண்டுமென்று அறைகூவி அழைக்கிறோம்.

ஒன்றுக்கு மேற்பட்ட இன மக்கள் வாழும் நாடு பிளவு படாமலிருக்க அதே நேரத்தில் அந்நாட்டில் வாழும் சகல இனங்களும் சிறுபான்மை பெரும்பான்மை என்ற பேதமின்றி சம உரிமைகளுடனும், சம வாய்ப்புகளுடனும் வாழவும் பெரும் பான்மையரின் ஆக்கிரமிப்புக்கு இரையாகாமல் சிறுபான்மை இனம் தப்பிப் பிழைக்கவும் சமஷ்டியரசியற் திட்டமே ஒரேயொரு வழியென்பதை உலக நாடுகள் பலவும் ஏற்றுக் கொண்டுள்ளன. முதலாளித்துவ நாடுகளும் சரி, கம்யூனிச நாடுகளும் சரி, இரண்டுமற்ற நடு நிலைமை நாடுகளும் சரி சமஷ்டி யரசியற் திட்டத்தையே ஏற்றுக் கொண்டிருக்கின்றன. இதற்கு உதாரணங்களாக ரஷியா, அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, போன்ற பல நாடுகளைக் கூறலாம்.

சமஷ்டியின் கீழ் பதினேழு மானிலங்களாக பிரிக்கப் பட்டிருந்தபாரதத்தில் அண்மையில் பதினெட்டாவதாக நாகர்களுக்கு ஒரு புதிய மாநிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அண்மையில் ரஷிய ஆக்கிரமிப்பின் பின் இலங்கையிலுள்ள அரசியற் கட்சிகளிடையே ''செக்கோஸ்லவேக்கியா' பற்றி பெரிதாகப் பேசப்பட்டு வருகிறது.

### செக். நாடு பின்பற்றுகிறது

செக்கோஸ்லோவேகியா இரண்டு பிரிவுகளைக் கொண்டது. பொஹீமியாவும் மொரேவியாவும் சேர்ந்த செக் பகுதி ஒன்று. ஸ்லோவேகியா மற்றொன்று.

ஸ்லோவேகியர்கள் சற்றுப் பின் தங்கியவர்கள். அகில செக் விவகாரங்களில் தமக்கு உரிய பொறுப்புக்கள் கிடைப்பதில்லை என்று அவர்களிடையே ஒரு முறை இருந்து வருகிறது. ரஷியப் படையெடுப்பை எதிர்ப்பதில் இரு பிரிவினரும் ஒரு முகமாகத்தான் செயலாற்றி வந்துள்ளனர்.

ஸ்லோவேகியாவில் ஒரு தனி கம்யூனிஸ்டுக் கட்சி பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. அதன் பொதுக் காரியதரிசியை அணைத்து செக் நாட்டின் காரியதரிசியாக்கித் தமது விருப்பம்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரெட்றிக் கோட்டை விவகாரம்:

# சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினர் ஆதிக்கத்தை எதிர்க்கும் சனநாயகப் பிரச்சினை!

## ‘செங்கோல்’ வெளியிடும் கருத்து

**(தமிழகத்திலிருந்து வெளி வரும் செங்கோல், வாரஇதழ் அதன் 22. 9. 68 இதழில் தீட்டியுள்ள “இலங்கையில் எதேச்சாதிகாரம்” என்ற ஆசிரியத் தலையங்கத்தை இங்கு தருகிறோம். ஈழத்தமிழின மக்களின் பிரச்சினைகளை நன்கு புரிந்துவைத்திருப்பவரும், ஈழத்தமிழர்களின் நலன்களில் அக்கறை கொண்டவருமான தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி. அவர்களே ‘செங்கோலின்’ ஆசிரியர் என்பது குறிப்பிடத் தக்கது.)**

இலங்கை அமைச்சரவையில்—அந்த நாட்டின் ஒரு பகுதியான—தமிழர் மாநிலத்தின் சார்பில் அங்கம் வகித்தார் திரு. திருச்செல்வம். அவர் இப்போது திரிகோணமலை பிரிடெரிக் கோட்டைப் பிரச்சினையில் பிரதமர் நடந்து கொண்ட முறையை எதிர்த்து பதவி துறந்துள்ளார். அவர் விலகியதால் காலியான இடத்திற்கு சிங்களவரை நியமித்து விட்டார் பிரதமர்.

இலங்கை, இரு வேறு மாநிலங்களைக் கொண்ட நாடு. ஒரு மாநிலம், தமிழ் வழங்கும்—தமிழ் மக்களே பெரும்பாலோராக வாழும்—யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பகுதிகளைக் கொண்டதாகும். மற்ருெரு மாநிலம், சிங்கள மொழி வழங்கும்—சிங்களவர்களே பெரும்பாலோராக வாழும் பகுதிகளை கொண்டதாகும்.

### உரிமை இழந்தது

திரு. திருச்செல்வமவர்கள் பதவி துறந்ததால், இலங்கை அமைச்சரவையானது தமிழ் மாநிலத்திற்குப் பிரதிநிதித்துவ மற்றதாகி விட்டது. இனி, தமிழ் மாநிலத்தின் சார்பில் பேசவோ தனது முடிவு எதையும் தமிழ் மாநிலத்தில் செயல்படுத்தவோ இலங்கை அமைச்சரவைக்கு உரிமை கிடையாது. அரசியல் சட்டப்படி நிலைமை வேறுவிதமாக இருக்கலாம். ஆனல், அரசியல் தருமப்படி நாம் சொல்வதுதான் யதார்த்தமான நிலைமை.

திருகோணமலை பிடெரிக் கோட்டையில் கோணேசுவரர் கோயில் இருப்பதால், அந்தக் கோட்டைப் பிரதேசத்தை “இந்துக்களின் புனிதமான நகர்” எனப் பிரகடனம் செய்யவேண்டுமென்று இந்துக்கள் கோரினர்.

### இந்துக்கள் கோரிக்கை

இலங்கையானது இந்தியாவைப் போன்று சமயச் சார்பற்ற நாடாக அறிவிக்கப்பட்டிருந்தால். அதன் ஒரு பகுதியான கோணேசுவரர் கோயில் பிரதேசத்தை இந்துப் பிரதேசமாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுப்புவதற்கு இந்துக்களுக்கு உரிமையில்லைதான். இதற்கு மாருக, இலங்கை புத்த சமயச் சார்புடைய நாடு என அறிவிக்கப்பட்டுவிட்டது. அதன் எதிரொலிதான் பிரிடெரிக் கோட்டை பற்றிய இந்துக்களின் கோரிக்கை. இதனை, சிங்களத் தலைவர்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

இலங்கைத் தீவிலே, இந்துக்களானேர்—ஏனைய இஸ்லாமிய, கிறிஸ்துவ மக்களைப் போல தீவு முழுவதும் பரவலாகச் சிதறிக் கிடக்கும் சிறுபான்மையினர் அல்லர்; அந்தத் தீவில் தொடர்ந்தாற் போலுள்ள ஒரே பிரதேசத்தில் சேர்ந்தாற்போல் வாழும் தனி இனத்தினர்; தனி மதத்தினர். அப்படியிருக்க, இலங்கை முழுவதையுமே புத்த சமயச் சார்புடைய நாடாக ஏற்கனவே அறிவித்தது முறையாகாது.

அது முடிந்துபோன விஷயமாயினும், அதே மரபைப் பின் பற்றி இலங்கையில் திரிகோணமலையிலுள்ள சிவன் கோவில் பிரதேசத்தை ‘இந்துக்கள் நகர்’ என அறிவிக்க இலங்கை அரசும் பௌத்தர்களும் சம்மதித்திருக்கலாம். அச்செயல், இந்து—பௌத்த ஒற்றுமையை உருவாக்க உதவியாக இருந்திருக்கும்.

### அரசியல் அநாகரீகம்



திரு. திருச்செல்வமவர்கள், இந்துக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுவிடவில்லை. அதுபற்றி விசாரணை நடத்த ஒரு கமிஷனை நியமித்தார்—அவ்வளவுதான்! அந்த கமிஷனின் அறிக்கை வரும்வரை பிரதமர்சிறிதுபொறுமை காட்டியிருக்கலாம். கமிஷன் அறிக்கைமீது இறுதி முடிவு எடுப்பதற்கு முன்பு தம்மைக் கலந்து கொள்ள வேண்டுமென்றே, கமிஷனின் அறிக்கையை அமைச்சரவையின் ஆலோசனைக்கு வைக்க வேண்டுமென்றே அமைச்சர் திருச்செல்வம் அவர்களுக்கு பிரதமர் சேனநாயகா ஆணையிட்டிருக்கலாம்.

அதைவிட்டு, திருச்செல்வமவர்கள் தமது அதிகார வரம்புக்கு உட்பட்டு மேற்கொண்ட ஒரு ஆரம்ப நடவடிக்கையை அடியோடு ரத்து செய்து ஆணையிட்டது அரசியல் நாகரிகமாகாது.

ஏற்கனவே மாவட்ட சுயாட்சி வழங்கப்படுவது தள்ளிப்போனதால் இலங்கைத் தமிழின மக்கள் வெறுப்புக் குள்ளாகியிருக்கிறர்கள். போதாக் குறைக்கு இனவுணர்ச்சியினும் புனிதமானதாகக் கருதப்படும் மதவுணர்ச்சியையும் தாக்கும்விதத்தில்இலங்கைப் பிரதமர் நடந்து கொண்டது அறிவுடைமையாகாது.

திரு. திருச்செல்வம் பதவி துறந்தது, வரவேற்கத் தக்கதே. இலங்கைத் தமிழரசுக் கட்சி, இந்துக்கள் கட்சியல்ல; இந்து முஸ்லிம்—கிறிஸ்தவர் கலந்துள்ள தமிழ்இனத்தவரின் தேசியக் கட்சியாகும். இந்தத் தேசிய இனத் தன்மைக்கு ஊறு நேராத வகையில் அக்கட்சி பிரிடெரிக்கோட்டைப்பிரச்னையில் செயலாற்ற வேண்டும்.

சிங்கள மொழியினரான பௌத்தர்களின் ஆதிக்கவுணர்வு, இன்று இந்துத் தமிழர்களைப் பாதிக்கிறதென்றால், நாளை இஸ்லாமிய—கிறிஸ்துவத் தமிழர்களையும் பாதிக்கலாம். ஆகவே, இந்துத் தமிழர்களுக்கு நீதி கிடைக்க, இஸ்லாமிய—கிறிஸ்துவத் தமிழர்களும் தமிழரசுக் கட்சியுடன் ஒத்துழைக்க வேண்டும். இது, இந்துக்களின் உரிமைப் பிரச்சினை மட்டுமல்ல; சிறுபான்மையினர் மீது பெரும்பான்மையினர் ஆதிக்கம் செலுத்த முயலும் எதேச்சாதிகாரத்தை எதிர்க்கும் ஜனநாயகப் பிர பிரச்சினையுமாகும்.

---

### புனித நகர் கூட்டத்தில்

# தமிழ் காங்கிரஸ் எம்.பிக்கள் கலந்து கொள்ளாததன் உண்மைக் காரணம் என்ன?

### திருமலைப்பிரமுகர் கூறுகிறர்!

“அரசாங்கம் இந்துக்களின் ஏகோபித்த கோரிக்கையான கோணேஸ்வரம் புனித நகர்ப்பிரச்சினையை அலட்சியம் செய்ததற்கு கண்டனம் தெரிவிப்பதற்காக திருமலையில் சென்ற வார இறுதியில் குமுறும் உள்ளங்களுடன் இந்துக்கள் கூடினர்; எரிமலை போல குமுறி நின்ற இந்துக்கள் மத்தியில்—மானம் கெட்டு அரசாங்கத்தில் இன்னும் அட்டைபோல ஒட்டிக் கொண்டிருப்பதன் மூலம் தமிழ் மக்களுக்கும் இந்துக்களுக்கும் மீளா அவமானத்தை தேடித்தந்து கொண்டிருக்கும் தமிழ் காங்கிரஸ் எம். பீ. க்கள் எப்படி முகம் கொடுத்து பேசமுடியும்? குமுறிநின்ற இந்துப் பொது மக்களிடம் தலைகாட்ட அஞ்சி திருமலைக் கூட்டத்துக்கு சமுகம் தராது வெற்றிகரமாகப் பின்வாங்கிவிட்ட தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் அதற்கு கூறும் காரணம் வேடிக்கையானது”

—இவ்வாறு திருமலை தமிழ் பிரமுகர் ஒருவர் சுதந்திரன் நிருபரிடம் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

“கோணேஸ்வர ஆலயத்தைச் சேர்ந்த பிரெடெரிக் கோட்டையைப் புனித நகராக பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையை ஒரு பௌத்த பிக்குவின் எதிர்ப்புக்கு அஞ்சி நிராகரித்துவிட்ட பிரதமரது செயல் கண்டு இந்நாட்டு இந்துக்களின் உள்ளங்கள் எல்லாம் எரிமலையாகி கொதிக்கின்றன. அந்த கொதிப்புணர்வை அரசாங்கத்துக்கு உணர்த்துவதற்காகவே திருமலையில் இந்துக்களின் ஊர்வலம், கூட்டம் நடத்தப்பட்டன.

இக்கூட்டம் கட்சி சார்பற்ற முறையில்தான் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் தமிழ்காங்கிரஸ் எம். பீக்கள் கலந்து கொள்ளவில்லையென்றல் அதற்கு மக்களைச் சந்திக்க அவர்கள் அச்சமடைந்ததே காரணமாகும்.

“தமிழ் மக்களின் தன்மானத்துக்கு சவாலாக அமைந்துள்ள இப்பிரச்சினையில் தமிழரசுக்கட்சியினர் அரசாங்கத்தை விட்டு வெளியேறி விட்டனர். ஆனல்தமிழ் காங்கிரஸ் எம். பீகளோ இன்னும் அரசாங்கத்துடன் மானம்கெட்டு ஒட்டிக் கொண்டு தானிருக்கிறர்கள். இதனல் தமிழ்மக்களின் மானத்தை விற்றுவருகிறர்கள்.

“இந்துக்களின் கோரிக்கையைப் புறக்கணித்து இந்துக்களின் உள்ளங்களில் வேலைப் பாய்ச்சிய அரசாங்கத்தில் இன்னும் ஒட்டிக்கொண்டிருந்து கொண்டு எப்படி இந்துக்களின் முகங்களில் விழிக்க முடியும்? ஏன் தமிழ் காங்கிகிரஸ் அரசாங்கத்திலிருந்து கோணேசர் ஆலயப் பிரச்சினையில் வெளியேறவில்லையென்று இந்துப் பெருமக்கள் இவர்களை திருப்பிக் கேட்டால் என்னபதில் கூறமுடியும்? மானம்போய்விடாதா? துரோகிகளால் மக்கள் முகங்களில் எப்படி விழிக்க முடியும்?

எனவே திருமலையில் நடைபெற்ற கோணேசர் புனித நகர்க் கூட்டதில் தமிழ் காங்கிரஸ் எம். பீக்களான இரு சிவசிதம்பரங்களும் கலந்து கொள்ளாததற்கு காரணம் மக்களைச் சந்திக்க அவர்கள் அஞ்சியதே. உண்மை இப்படி இருக்க, கட்சி அரசியலை வளர்க்க கோணேசர்ஆலயப் பிரச்சினையை உபயோகித்தார்கள் என்று கூறுவது போலியான கூற்று.

இந்துக்களின்மானம்போனலும் பரவாயில்லை என்று மக்களின் விருப்பத்துக்கு மாருக கிடைத்த பதவியில் அட்டைபோல ஒட்டிக் கொண்டிருக்கும் தமிழ் காங்கிரஸ் எம். பீக்கள் பாடம் படிக்கும் காலம் அதிக தூரத்திலில்லை.”

—இவ்வாறு அப்பிரமுகர் சுதந்திரன் நிருபரிடம் குறிப்பிட்டார்.

---

### “இ. தொ. கழகம் கலைக்கப்படும் என்பது முழுப் பொய்”

‘அங்கத்தினர்கள் குறைந்து வருமானமும் குறைந்து விட்டதால் இலங்கைத் தொழிலாளர் கழகம் கலைக்கப்பட வேண்டிய நிலையிலிருக்குமானல் தொழிற் சங்கம் என்ற முக்கியத்துவம் இழந்து யாரும் நோக்க முடியாத நிலையிலிருக்கும். ஆனல் கழகம் கலைக்கப்படவிருக்கிறதென்ற செய்திகள் கொட்டை எழுத்துகளில் வெளிவருவதிலிருந்தே கழகம் முக்கிய தொழிற் சங்கமாக இருந்து வருகிறதென்பதையும், அதன் நடவடிக்கைகளை மக்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறர்கள் என்பதையும் எடுத்துக் காட்டக் கூடியதாக இருக்கிறது. ஆகவே இதிலிருந்தே கழகம் நல்ல நிலையில் இருப்பதை நீங்கள் உணர்வீர்கள். இதை மனதில் வைத்து இது போன்ற ஆதாரமற்ற பிரச்சினைகளுக்கு நீங்கள் செவிசாய்க்காதீர்கள்.

இவ்வாறு 21-9-68 இராகலை பணிமனையில் நடைபெற்ற இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் மாவட்ட தோட்டத் தலைவர்கள், வாலிப மாதர் முன்னணிக் கூட்டத்தில் உரையாற்றிய கழகத்தின் துணைச்செயலாளர் திரு. கோ. இ. து. கோவிந்தராசன் அவர்கள் கூறினர். இக்கூட்டம் திரு. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

திரு. கே. கே. நடேசன், கழகத் துணைத் தலைவர் திரு. ஜே. எஸ். பெஞ்சமின், துணைப் பிரதிநிதி டி. வி. கருப்பையா ஆகியோர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து நட்சத்திரங்களுடன் ஐம்பது நிமிடங்கள்:

# விஜய நிர்மலா தெரிவித்த அலேக் சமாச்சாரம்!

(முன்தொடர்ச்சி)

புது வேஷ்டி. உயர்ந்த ரகசட்டை மாப்பிள்ளைகளை. மகிழ்ச்சி கலந்த சிரிப்பு, கம்பீரமான பார்வை-இப்படித்தான் காட்சியளித்தார் முத்துராமன் இதே செட்டில்.

'வாங்க, வாங்க' என்று வரவேற்றார் கலியாண மாப்பிள்ளை முத்துராமன்.

'என்ன திருமணத்திற்குத் தயாரா?,

'ஆமாம்' என்றார் சிரித்துக்கொண்டே,

'எப்படி இருக்கிறது சினிமா பீல்ட்?'

'என்னைப் பொறுத்தவரை தேவலை என்றுதான் சொல்வேன். நடித்த படங்கள் வெளிவந்திருக்கின்றன. தற்தற்பொழுது பூஜை போடப்பட்ட படங்கள்தான்.'

'எம். ஜி. ஆர். படங்கள் என்றாலே முத்துராமனுக்கு அங்கே இடம் உண்டு என்கிறார்களே!'

'ம்... அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்களேன்,' என்றார் லேசாக சிரித்தவண்ணம். செட் தயாராம் நான் வரட்டுமா?' என்றார் பவ்யமாக.

'தாராளமாக' என்று சொல்லி விட்டுக்கிளம்பினோம்

### விஜயநிர்மலா

மணமகன் ஆயிற்று. அடுத்தது மணமகள். திருமணப் பெண்ணிற்கே உரித்தான அலங்காரத்துடன் காணப்பட்ட விஜயநிர்மலாதான் நாம் சந்தித்த நான்காவது நட்சத்திரம். 'அலேக்'காக நட்சத்திரப்பதவிக்கு உயர்ந்தவர்!

### அந்தஅலேக்வேடம்!

'எங்க வீட்டுப் பெண்ணில் ஆரம்பமாச்சுங்க என்னுடைய தமிழ்ப்பட நடிப்புத் தொழில். அன்றிலிருந்தே படங்களில்எனக்கு 'ஹெவி டைப்' ரோல்கள் தான். உணர்ச்சிகள் நிறைந்த பாத்திரம் தான். 'அந்த பணமா பாசமா வந்தது ஒரு பெரிய 'சேஞ்ச்' இப்போது எந்த ரோலைக் கொடுத்தாலும் இவளால் நடிக்க முடியும் என்ற நம்பிக்கை ஊன்றியிருப்பதாக சிலர் சொல்கிறார்கள்.' என்று ஆரம்பித்தார் அவர்.

'பணமா பாசமாவில் அந்த காரெக்டரை நீங்களே விரும்பினீர்களா நடிக்க ஆரம்பிப்பதற்கு முன்னால்?'

'திரு. கே. எஸ். ஜி. அவர்கள் இந்த படத்தின் கதையைச் சொல்லி நான் ஏற்க வேண்டிய பாத்திரத்தின் தன்மையையும் கூறிய பொழுது எனக்குக் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. நான் அது வரைக்கும் ஏற்றதெல்லாம் 'சீரியஸ்' ரோல்கள்.

இப்பொழுது ஒரு திடீர் மாற்றம். இருந்தாலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை திரு. கோபால கிருஷ்ணன் மூலம் எனக்கு ஏற்பட்டது. அவர் சொன்னார், 'இந்த வேடத்தை ஒரு ஹாஸ்ய பாத்திரமாகக்கூட மாற்றிவிடலாம். ஆனால் ரசிகர்களின் உள்ளத்தைத் தொடாது போய் விடும். அப்படி ஆகவேண்டும் என்பதை நான் விரும்பவில்லை. ஆகவே தான் உன்னைத் தேர்ந்தெடுத்தேன் உனக்கும் இந்த வேடம் புதிது தான் என்றாலும் எனக்கு நம்பிக்கை உண்டு. என்ன?' என்று கேட்டார். பலமாகத் தலையை ஆட்டி விடடேன். நல்லபடியாக வெற்றியும் அடைந்தேன். அதற்காக திரு. கே. எஸ். ஜிக்கு என் முழு நன்றியையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்' என்றார் அவர்.

'இனிமேல் எந்தமாதிரி பாத்திரங்களில் நடிக்க விருப்பம்?'

திரும்ப திரும்ப அந்த 'டைப் பெண்ணாகவே நடிக்க நான் விரும்பவில்லை, பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடிக்க விரும்புகிறேன்



இருந்தாலும் பாருங்க தெலுங்கில்மாமியாரும் புது மாட்டுப் பொண்ணும்' என்று ஒரு படம் அதில் கிட்டத்தட்ட இந்த மாதிரி வேடம் தான். தெலுங்கு படங்களில் என்னுடைய சோகரஸத்தைப் பார்த்தவர்கள் 'ஒஹோ இப்படியும் இவளுக்கு நடிக்கத் தெரியுமா?' என்று சொல்லிக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்' என்றார்.

### கோடை மழை போல!

'பொதுவாக என்னைப் போன்ற காரெக்டர்களை விரும்பி ஏற்கிறீர்கள். சில சமயங்களில் ஏனோ தானோ வென்று நடித்து விடுவது உண்டில்லையா?'

'என்னிடம் ஒன்றுங்க. நான் பட உலகில் காலடி எடுத்து வெச்சதிலிருந்து எந்த படமானாலும் முதலில் என்னுடைய காரெக்டரின் தன்மையை நல்லா புரிஞ்சுண்ட அப்புறம் தான் நடிக்க ஒப்புக் கொள்வேன். பணம் சம்பாதிப்பது என்னுடைய லட்சியமில்லை. வந்த சான்சுகளை யெல்லாம் ஏற்றுக் கொண்டு விடலாம். ஆனால் அப்படி இருந்தால் ஒன்று அல்லது இரண்டு வருஷங்கள் தான் இருக்க முடியும். நிலையா இருக்கணும் கொஞ்சம் யோசிச்சு நமக்கு ஏற்ற பாத்திரத்தை ஒப்புக் கொண்டு நடித்தால்தான் முடியும் என்பது எனது நம்பிக்கை. கோடை காலத்து மழை மாதிரி நான் இருக்க ஆசைப்படலீங்க, சோப்பு சீப்பு கண்ணாடி படத்தில் கொஞ்சம் ஜாலி 'டைப் ரோல்தான். மற்ற படங்களிலெல்லாம் ஏன் இந்த வீனஸ் பிக்சர்ஸ் படத்திலே கூட கொஞ்சம் ஹெவி டைப்தான்.'

மலையாள படங்களுக்கு போய் வருகிறீர்கள் போலிருக்கிறதே

ஆமாம் தெலுங்கில் மலையாள வசனங்களை எழுதி வைத்துக் கொண்டு நடிக்கிறேன். அவ்வளவு வித்தியாசம் ஒன்றும்தெரிவதில்லை இங்கேநடிப்பதற்கும் அங்கே நடிப்பதற்கும். ஆனால் ஒரு கஷ்டம் என்ன வென்றால் பத்து இருபது நாட்களில் ஒரு படத்தையே முடித்து விடுகிறார்களா, நமக்கு தொடர்ந்து கால்ஷீட் கொடுக்க வேண்டியிருக்கிறது அதனால் இங்கே இருக்கிற ஷீட்டிங்கெல்லாம் போய் விடுகிறது. இருக்கற நேரத்திலே முடிந்த இடங்களிலெல்லாம் நேரத்தைப் பிரித்துத் தரத்தான் எனக்கு ஆசை.'

ஹிந்திப் படத்திற்குப் போக ஏதாவது...

'விருப்பம் உண்டுங்க ஆனால் நேரம் எங்கே இருக்கு? ஹைதராபாத்துக்கு போய்விட்டு வருவதென்றாலே இங்கே நடக்க வேண்டிய ஷீட்டிங்கெல்லாம் வீணாப் போகிறதே என்று தோன்றுகிறது அவ்வளவு தூரம் எங்கே போவது?



### உள்ளம் கவர்ந்த நடிகை

'சிலரைப் பாக்கிறோம் வாழ்க்கையில் அவர்கள் முன்னேற்றம் அடைந்து ஒரு உயர்நிலையை எட்டிப் பிடித்தவுடன், தான் அந்த நிலையை அடைவதற்கு தூண்டுகோலாகவோ, அல்லது வழிகாட்டியாகவோ இருந்தவர் இவர் தான் என்று சொல்வார்கள். அப்படி உங்களுக்கு யாராவது உண்டா?'

'என்னகேக்கிறீங்க! என்ன கேக்கறீங்க?'

'அதாவது நீங்கள் நடிக்க வருவதற்கு முன்னால் யாராவது இவர் மாதிரி ஆக வேண்டும் அல்லது நடிக்க வேண்டும் என்று நினைத்ததுண்டா...?'

'அப்படியா உண்டுங்க' என்று மெல்ல சிரித்தவர், சாவித்திரியைப்பார்த்துஅப்படி நினைத்ததுண்டுங்க, அவருடைய நடிப்பு எனக்கு ரொம்ப பிடிக்கும் முக்கியமா குறிப்பிடணும்னா 'கை கொடுத்த தெய்வத்தை தான் சொல்வேன். ரொம்ப நல்லா இருந்ததுங்க அதிலே அவுங்க நடிப்பு' என்கிறார் புகழேணியில் ஏறிக் கொண்டிருக்கும் விஜயநிர்மலா.

அவரிடமிருந்து விடை பெற்றுக் கொள்கிறோம்.

# நடிகை புஷ்பலதாவிடம் கேட்டதும்-கிடைத்ததும்!

இது வரை தாங்கள் நடித்துள்ள படங்களில் உணர்ச்சிவசப்பட்டு நடித்த காட்சி எது?

'கற்பூரத்தில் ஒரு காட்சி. கெட்ட வழியில் செல்லும் தம்பியினை (ஸ்ரீ காந்த்) நான் அடிக்கும் ஒரு கட்டம். பிறகு ஒற்றுமையாயிருந்த குடும்பத்தில் குழப்பம் வந்து விட்டதேயென்று வருந்தி முருகக் கடவுளின் படத்தருகேசென்று அழும்காட்சி தான் எனக்கு மிகவும் பிடித்தமானது. படப்பிடிப்பு முடிந்து பல நிமிடங்கள் வரை எனக்கு ஒரே தலி வலி! ''ஷாட்'' முடிந்ததும் செட்டிலிருந்த அனைவரும் (என் கணவர் கூட) என் நடிப்பை மிகவும் பாராட்டினார்''!

**தங்கள் கணவர் விசேஷமாக தங்கள் நடிப்பைப் பாராட்டிய படம் ஏதாவது...?**


உண்டு. ''ராமு''வில் கணவனை ஊருக்கு விடை கொடுத்து அனுப்பும் கட்டத்தில் என் நடிப்பு நன்றாயிருந்ததாகப் பாராட்டினார் அவர்.

**தாங்கள் எதிர்பார்த்து நடக்காத சம்பவம் ஏதேனும் உண்டா?**

ஜனாதிபதி தேர்தலுக்குப் போட்யிட்டு வெற்றிவாகை சூடவிருந்த அமரர் ராபர்ட் கென்னடியை டில்லிக்குச் சென்று டெலிவிஷனிலாவது பார்க்க வேண்டுமென நினைத்திருந்தேன். நினைத்தது நடக்கவில்லை.

அவசரத்தில் ஏதாவது செய்துவிட்டு பின்னால் அதைப் பற்றி நினைத்து வருத்தப்படுவது உண்டா?

(சிரித்துக்கொண்டே) எனக்கு அடிக்கடி கோபம் வரும். அப்போது யாராயிருந்தாலும் திட்டிவிடுவேன். பிறகு மற்றவர்களைப் புண்படுத்தும் அளவுக்கு திட்டிவிட்டோமே என்று நினைத்து வருந்துவது உண்டு!



படப்பிடிப்பில் கலந்து கொண்ட போது ஏதாவது விபத்துக்கு உள்ளாகியிருக்கிறீர்களா?

'கொங்குநாட்டுத்தங்கம்' என்ற படத்துக்கான வெளிப்புற காட்சி ஊட்டியில்படமாக்கப்பட்டபோது குதிரை ஏறி சவாரி செய்தேன். முன் அனுபவமில்லாததால் ஒரு பாறையில் திடீரென விழுந்ததில் முட்டியில் அடிபட்டுவிட்டது. அப்போது இருந்த தைரியமே அலாதிதான்!

ஓய்வு நேரத்தில் புத்தகம் படிக்கும் வழக்கம் உண்டா?

சாண்டில்யனின் சரித்திர நாவல்கள் எனக்கு மிகவும் பிடிக்கும். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அவரது நாவல்களைப் படித்து மகிழ்வேன்!

நீங்கள் நடனக்கலையிலும் தேர்ந்தவர் என்று கேள்வி? இப்போது அதைப் பயிற்சி செய்வதில்லையா?

பரதநாட்டியத்தை முறைப்படி பயின்றவள் நான். எனது குரு தஞ்சாவூர் மணிப்பிள்ளை இறந்த பிறகு நானும் ஆடுவதை விட்டுவிட்டேன்.

வேறு ஏதாவது மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு உண்டா?

தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்திப் படங்களில் இதுவரை நடித்திருக்கிறேன். கன்னடம் மட்டும் தான் பாக்கி! சரளமாகப் பேசுமளவிற்கு ஆங்கிலத்தைப் பயில வேண்டும் என்று எனக்கு நெடுநாளாக ஆசையிருந்து வருகிறது. படித்தாலும் பழக்கத்தில்தான் சரளமாகப் பேசவரும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். பார்க்கலாம்!

எந்த மேல் நாட்டு நடிகையின் நடிப்பு தங்களுக்குப் பிடிக்கும்?

**சோபியா லாரென்னின் நடிப்பில் மெய்மறந்து விடுவேன்.**

**—பேட்டி கண்டவர் திரைவாணன்**

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

றாரே இதுவும் துவேஷமா? இப்படியான சந்தர்ப்பவாதிகளின் பொறுப்பற்ற வெட்டிப் பேச்சுக்களினால் சமுதாயத்தையே மற்றையவர்கள் மதிக்கமாட்டார்கள்.

இலங்கையின் சரித்திரமே விஜயன் காலத்திலிருந்தே ஆரம்பமாகியது என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறினாலும் அதற்கு எத்தனையோ காலத்துக்கு முன்னதாகவே இருந்த ஒரே ஒரு ஆலயம் திருக்கோணஸ்வரர் ஆலயம் என்பதை வெகுவிரைவில் எல்லோரும் உணரப் போகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாய் வாலை ஆட்டலாம்!

(4-ம் பக்கம் பார்க்க)

குறிப்பிட்டு சவால் விட்ட போது நாம் அதை ஏன் மறுக்கவில்லை என்று திரு. பொன்னம்பலம் கேட்கின்ருர்.

ஆந்த விவாதத்தில் கடைசி நாள் தான் திரு. பொன்னம்பலம் பேசினுர். எமது கட்சி சார்பில் அவரது இக் கூற்றை மறுத்துப் பேசுவதற்கு அவகாசம் இல்லாது போய்விட்டது. தருணம் வரும்போது பாராளுமன்றத்தில் அவருக்கு உரிய பதில் கொடுக்கப்படும்.

அரசாங்கத்தின்திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், எமது எதிர்ப்பு இயக்கங்களினுல் எமது பிரதேசத்தில் நடை பெருமல் தடுக்கப்பட்டிருக்கின்றது.

எமது மொழியுரிமையையும் நிலவுரிமையையும் காக்க நாம் எடுத்த நடவடிக்கைகளைப் பொது மக்கள் மறந்துவிட்டார்களென்று திரு. பொன்னம்பலம் நினைக்கிருர்.

சுருங்கக் கூறின், தமிழரசுக் கட்சி என்னும் ஸ்தாபனம் இல்லையாயின், பெரும் உக்வேகத்துடன் எழுந்த தனிச் சிங்கள ஆதிக்கம் தமிழ் இனத்தை இதுவரை அழித்தொழித்திருக்கும். அப்பேராபத்திலிருந்து தமிழ்ப்பேசும் இனத்தைக் காப்பாற்றிய பெருமை தமிழரசுக் கட்சியின் சாதனைகளில் மகத்தானது.

எமது கொள்கைகள், இலட்சியங்களை நாம் ஒரு பகட்டாகப் பாவிக்கிருேமென்று அவர் கூறுகிருர். அவரினது கொள்கைகளை அப்படிப் பகட்டாகப் பாவிப்பது போல நாங்களும் பாவிக்கிருேமென்று அவர் நினைக்கிருர்போலும்.

அவர் அரசியலில் உறுதியான கொள்கையற்றவர். அதுபோல் நாமும் கொள்கைகளும், இலட்சியங்களும் அற்றவர்களென்று நினைக்கின்ருர்.

எமது கொள்கைகள், இலட்சியங்கள் எமக்கு உயிர் நாடி சமஷ்டி அரசியலின்றேல் தமிழ்ப்பேசும் மக்களுக்குக் கதியில்லையென்பது எமது விசுவாசம்.

### தனியாசு அல்ல

நாம் ஒருபோதும்சுதந்திரத் தமிழரசு உருவாக்குவோமென்று சொன்னதில்லை. தமிழரசு என்ருல் சுதந்திரத் தமிழரசு (தனி அரசு) என்று கருத்தல்ல.

இன்றிருக்கும் சென்னை மாகாண அரசு ஒரு சுதந்திரத் தமிழரசு அல்ல, இந்திய சமஷ்டி அமைப்பில் சென்னை மாகாண அரசை தமிழக அரசு என்று பெயர் சூட்டியிருக்கிருர்கள்.

திரு. பொன்னம்பலம் திரு. டி. எஸ். சேனநாயகாவுடன் ஒத்துழைத்தற்கும் நாங்கள் திரு. பண்டாரநாயகா, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா, திரு. டட்லி சேனநாயகாவுடன் ஒத்துழைத்ததற்கும்பெரும் வித்தியாசம் இருக்கின்றது.

நாங்கள் ஒத்துழைப்பு கொடுத்த போதெல்லாம் தமிழ்ப்பேசும் மக்களின் உரிமைகளுக்காகவே அவர்களுக்கு ஆதரவளித்து வந்திருந்தோம். திரு பொன்னம்பலம் ஒரு நிபந்தனையுமின்றி சரணுகதி அடைந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதியும் தமிழ்ப்பேசும் மக்களை இணைத்து ஒரே குரலில் பேசவைத்த பெருமை தமிழரசுக் கட்சிக்கே உரியது.

### ஒரே கட்சி

ஒரு கொள்கைக்கு எந்த நாட்டிலும் நூற்றுக்கு நூறு வீதம் ஆதரவு கிடைப்பதில்லை. ஆனல் இன்றுள்ள ஜனநாயக பாராளுமன்ற ஆட்சி அமைப்பின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப்பேசும் மக்களின் வாக்குகளின் மூலம் அதிகப்படியான பிரதி நிதித்துவத்தைப் பெற்ற ஒரே கட்சி தமிழரசுக் கட்சியாகும்.

ஆகவே தமிழ்ப்பேசும் மக்களுக்கு உழைக்க முன்வந்துளளோமென்று கூறும் இதரகட்சிகள், பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைப் பெற்ற தமிழரசுக் கட்சியுடன் இணைந்து உரிமைகளைப் பெற போராடுவதற்கு முன் வருவதைவிட்டு, தமிழரசுக் கட்சி தன் கொள்கைகளைக் கைவிட்டு தங்களுடன் இணைய வேண்டுமென்று கூறித் திரிவது அரசியல் ஞானமற்ற வாதமாகும். "நாய் வாலை ஆட்ட வேண்டுமே தவிர, வால் நாயை ஆட்டமுடியாது!"

ஆகையினுல் திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு நான் சொல்லக்கூடியது, 'நான்' என்னும் அகங்காரத்தைத் தமிழ்ப்பேசும் இனத்தின் பேரால் கைவிட்டு 1956ம். 60ம், 65ம் ஆண்டுகளில் நடந்தநான்கு பொதுத் தேர்தல்களில் பெரும் பாலான தமிழ்ப்பேசும் மக்கள் தேர்ந்தெடுத்த தமிழரசுக் கட்சியைப் பின்பற்றி, தமிழ் மக்களுக்கு உழைக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கிறேன். அல்லாவிடில், தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் கைங்கரியத்தை இனிமேலாவது கைவிடுமாறு கேட்கின்றேன்.

### மக்களே தீர்க்கட்டும்

தமிழ் மக்களின் எதிர்காலத்தைத் தமிழ் மக்களே தீர்மானிக்கட்டும் என்று திரு. பொன்னம்பலம் கூறுகின்ருர். நானும் அதையே கூறுகின்றேன். 1956, 1960 மார்ச், 1960 ஜுலை, 1965 ஆகியநான்கு பொதுத் தேர்தல்களில் தமிழ் மக்கள் தமது எதிர் காலத்தை தீர்மானித்து எம்மைத் தெரிவு செய்து அனுப்பினுர்கள். அந்தத் தீர்ப்பை ஏற்க மறுத்தார் திரு. பொன்னம்பலம்.

1970ம் ஆண்டுத் தேர்தலிலும் தமிழ் மக்கள் செய்யும் முடிவை திரு. பொன்னம்பலம் ஏற்றுக் கொள்ள மாட்டார் எனவே நான் கருதுகிறேன்.

தமிழ்பேசும் மக்கள் பிரிவில்லாமல் ஒன்ருக வாழ வேண்டும்; எமக்கு மத்தியிலுள்ள குறைகளையெல்லாம் தவிர்த்து முன்னேறுவதுதான் இன்று அவசியம்.

எமது கட்சியின் கொள்கைகளைக் கைவிடவேண்டும் என்றும் அப்போதுதான் பெரும்பான்மைச்சமூகத்தினர் எமது உரிமைகளைத் தருவார்கள் என்றும் திரு. பொன்னம்பலம் கூறுகிருர். அவர் சொல்வதுபோல் நாம் "கொள்கையைத் துறந்தால் பலன் எதுவும் கிடைத்துவிடாது."

கட்சியின் நோக்கங்களைக் கைவிருவதால் உரிமை கிடைத்து விடுமா? அப்படி காங்கிரசுடன் சேர்ந்து விட்டால் கூட உரிமை கிடைத்துவிடுமா?

பெரும்பான்மையினரின் அனுமதியுடன்தான் உரிமைகள்பெற வெண்டும் என்ருல் எதற்காக திரு. பொன்னம்பலத்துடன் சேர வேண்டும் என்பது புரியவில்லை. அதற்குப்பதிலாகப் பெரும்பான்மைக் கட்சியுடனேயே சேர்ந்து விடலாமே.

பெரும்பான்மையான தமிழ் பேசும் மக்களுக்கு எது நன்மை பயக்கும் என்று கருதப்படுகிறதோ அதைத்தான் எமது கட்சியான தமிழரசுக் கட்சி மேற்கொள்ளும்.




## இலங்கை மத்திய வங்கி...

(1-ம் பக்க தொடர்ச்சி)

பெயர்ப்புத்துறை மத்திய வங்கியில் செம்மையாக இயங்கவும், தமிழ்மொழி பெயர்ப்பாளர்களின் தலைமை உயர் பதவியாளராக ஓர் தமிழர் நியமிக்கப்படவேண்டும் என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

## அந்தரங்கம் அம்பலம்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதிகளைகைப்பற்றிவிடலாம்.

(2) அப்படியொருஒற்றுமை முன்னணி உருவாக்கப்படாவிட்டாலும், தமிழ் காங்கிரஸ் ஒற்றுமைக்கு தயாராக நின்றது; தமிழரசுக் கட்சிதான் அதற்கு மறுத்து விட்டது என்று தமிழ் மக்களிடையே பிரசாரம் செய்யலாம். அதன்மூலம் தமிழ் மக்களின் ஆதரவை கொஞ்சமாவது பெறுவதற்கு முயற்சிக்கலாம்.

இத்தகைய சதி நோக்குடன் தமிழ் காங்கிரஸ் பிரமுகர்கள் எழுப்பிய ஒற்றுமைக் கூக்குரலில் கொழும்புத் தமிழ்ப் பிரமுகர்கள் சிலர் தெரியாத்தனமாக வீழ்ந்துவிட்டனர் என்று கூறப்படுகிறது.

தமிழ் காங்கிரஸ் பிரமுகர்களின் சதி நோக்கம் தெரிய வந்ததும் தமிழரசுக்கும் தமிழ்காங்கிரசுக்கும் ஒட்டுப்போட முயன்றவர்களில் சிலர் அந்த முயற்சியை இப்போது முற்ருக கைவிட்டுவிட்டார்கள் என்றும் அறியப்படுகிறது.

## படிப்பது...

(4-ம் பக்கத் தொடர்ச்சி]

### எச்சரிக்கை

எனவே இந்த நாட்டில் தேசிய ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்ற மனப்பான்மை பிரதமருக்கு கொஞ்சமாவது இருந்தால் புதிய ஊழியர்கள் சிங்களம் படிப்பதற்கான கால எல்லையை இன்னும் நீடிக்க வேண்டும். அத்துடன், சிங்களத் தேர்ச்சியடையாத ஒரே காரணத்துக்காக அரசாங்க சேவையிலிருந்து தமிழர் எவரையும் வெளியேற்றும் நடவடிக்கைகளுக்கும் முற்றுப்புள்ளிவைக்க வேண்டும்.

## செக்கோஸ்ல...

(4-ம் பக்கத்தொடர்ச்சி

களை நிறைவேற்றிக் கொள்ளுவது ரஷியாவின் திட்டங்களில் ஒன்று.

இதை அறிந்த செக் தலைவர்கள் ஸ்லோவக் மக்களின் முழுநம்பிக்கையையும் பெறுவதற்காக, செகொஸ்லோவேகியாவை இரண்டு தனி குடியரசுகளாக்கி, முழு சுயாட்சியை இரு பகுதிகளுக்கும் அளித்து, ஒருபொது சமஷ்டி அமைப்பை ஏற்படுத்துவதற்கான அரசியல் சீர்திருத்தங்களைக் கொண்டு வர முற்பட்டிருக்கிருர்கள். அரசாங்கத்தில் மட்டுமின்றி கட்சியிலும் இந்த 'சமஷ்டி' கோட்பாடு அனுஷ்டிக்கப்பெறும்.

### ஒரே வழி

செக் தலைவர்கள் முடிவு செய்துள்ளதைப் போல இலங்கையிலும் இனப்பிரச்சினைகளைத்தீர்க்கவும், இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பேணவும் ஒரே வழி, தமிழ் மாநிலத்தையும், சிங்கள மாநிலத்தையும் தனித்தனியே பிரித்து உள்ளூர் விவகாரங்களில் முழு சுயாட்சியளிப்பதோ நாட்டுப்பாதுகாப்பு போன்ற பொது விஷயங்கள் மத்திய அரசிடம் இருக்கும். இந்த முடிவுக்கு இன்றில்லாவிடினும்ஒருநாள் இந்த நாட்டுச் சிங்களத் தலைவர்கள் வந்தே தீரவேண்டும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவர்களை ஒற்றுமைப்படுத்த முயல்வது வீண்முயற்சி, மக்களே ஒன்றுசேர வேண்டும்!

## தங்குமடம்

"சுமைதாங்கி"

"வாங்க, ஏது இந்தப் பக்கம் அத்தி பூத்தாப்போல்..."

"வேறொன்றுமில்லை. உங்கள் மகன் இங்கிலாந்து பயணம் போறதாகக் கேள்விப்பட்டன். அதான் ஒருக்கால் பார்த்துப் போகலாமென்று வந்தன்"

"யாரைப்பார்க்க வந்தீர்கள், என்னையா அல்லது மகனையா?"

"என்ன இப்படிக் கேட்கிறீர்கள்? இருவரையும் பார்த்துப் போலாமென்றுதான்..."

"என்னை வேண்டுமானால் பாருங்க ஆனால் நிச்சயம் என் மகனை நீங்கள் பார்ப்பதை அனுமதிக்கமுடியாது'

"அனுமதிக்கமாட்டீர்களா?"

"நான் அனுமதித்தாலும் அரசாங்கம் அனுமதிதராதையா"

"உங்களுக்கு எப்பவும் என்னோடு பகிடிதான் ஏன் மகன் வீட்டிலில்லையா?"

"ஓய் என் மகன் லண்டன் போய் நாலாயிரத்து முன்னூற்று இருபது நிமிடங்களுக்குமேலாகிறது...'

'என்னங்க எனக்கே கணக்கு விடுறீங்க சென்ற வாரங்கூட உங்க மகனை எங்கேயோ பார்த்ததாக ஞாபகம் இருக்கே...'

'பார்த்திருப்பீங்க, ஆனால் என் மகன் பயணம் போய் மூன்று நாட்கள்தானே ஆகிறது'

'ஹஹஹா! நீங்கள் நிமிடத்திலே சொன்னதும் எனக்குப் புரியவில்லை இப்ப புரியுது'

'என்ன புரியுது?'

'உங்க மகனைப் பிரிந்து வாழும் ஒவ்வொரு நிமிடத்தையும் கணக்கெடுத்துக் கொண்டுதானிருக்கீங்க என்பது புரியுது'

'நல்லாச் சொன்னீங்க, இதில் ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லீங்க, ஆனால், சின்னஞ்சிறு குழந்தைகள் பத்துவயதுக்குட்பட்ட இருசிறுமிகள் பாடசாலை செல்வதற்காகப்பெற்றோரைப் பிரிந்து லண்டன் பயணமானார்கள் என்று சொன்னால் நம்புவீர்களா?'

'ஏன் நம்ப முடியாது யாராவது வெள்ளைக்காரரின் பிள்ளைகளாக...'

'அதுதானில்லை, நம்ம யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ப் பிள்ளைகள்தான்'

'உண்மையாகவா?'

'உண்மைதான், மகனைப் பயணம் அனுப்ப கட்டுநாயக்க சென்றிருந்தேன், விமானம் இரவு பத்து மணிக்குமேல்தான் புறப்படும் என்றாங்க. அதுவரை காத்திருந்தேன், இரு பெண் குழந்தைகள் ஒன்றுக்கு ஒன்பது வயதிருக்கும் மற்றதுக்கு எட்டு வயதிருக்கும் பயணத்திற்குத் தயாராக வந்திருந்தாங்க. 'எங்கே பயணம்' என்று கேட்டேன் 'லண்டன்' என்றார்கள் 'தொடர்துக் 'ஷ்கூல் ஹொலிடேய்க்கு வந்திருந்தோம் இப்போ போகிறோம்' என்றாங்க, விமானமும் வந்தது அந்தச் சிறுசுகளும் விமானத்தில் ஏறிப்போயிட்டாங்க. சிறுமிகளின் பெற்றோரும் கூடவே செல்வார்கள் என்று எண்ணியிருந்த எனக்கு அவர்கள் என்னைப் போல் வழியனுப்பிவைப்பதற்காகவே வந்திருந்தார்கள் என்பதை அறிந்தபோது ஆச்சரியமாகவே இருந்தது, வசாரித்ததில் யாழ்ப்பாணப் பொலிஸ் சுப்பிரிண்டென்டன் திரு. சுந்தரலிங்கத்தின் உறவினர் என்பது தெரிந்தது. தம்பதிகள் இங்கிலாந்தில் உத்தியோகம் பார்க்கிறார்களாம். சிறுமிகளின் தந்தைக்குச் சுகமில்லாததால் பிள்ளைகளை முன்கூட்டியே அனுப்பி விட்டு ஆறுதலாக லண்டன்போக இருக்கிறார்கள் என்பதும் தெரிய வந்தது..."

'அப்படித்தான் பிள்ளைகளை வளர்க்க வேண்டும், வருங்காலமாவது தமிழன் தலைநிமிர்ந்து வாழவேண்டுமானால்...'

'இலங்கையை மாத்திரம் நம்பி இருக்கமுடியாதுதான் அதிலும் யாழ்ப்பாணத்திற்குள் மாத்திரம் முடங்கிக் கிடப்பது ஆபத்து. வடகிழக்கு மாகாணங்களில் பரவலாக வாழப்பழக வேண்டும், வசதியுள்ளவர்கள் உலகமெல்லாம் பரந்துவாழ முயற்சிக்க வேண்டும் எங்கிருந்தாலும் தமிழன் தன் சொந்தநாட்டில் தலைநிமிர்ந்து வாழ உதவ வேண்டும்'

'உண்மை வெளிநாடு செல்லும் பிள்ளைகளுக்கு அந்த அறிவை ஊட்டி வைக்க வேண்டியது அவசியம்'

'சரி அப்ப நான் வாறேனுங்க'

"சரி போயிட்டுவாங்க, அடிக்கடி இந்தப்பக்கம் வாங்க..."

## சமஷ்டியை கைவிடுதற்கு தமிழரசாருக்கும் உரிமையில்லை!

தமிழரசுக் கட்சியின் தலையாய கொள்கை ஒற்றையாட்சிக்குப் பதில் ஒருவகை இணைப்பாட்சியைப் பெறுவதேயாகும். திரு. பொன்னம்பலம் அவர்கள் தமது ஐம்பதுக்கு ஐம்பதுக்குப் பதில் இத்தகைய ஒரு திட்டத்தை முன் வைத்துப் போராடியிருப்பாராயின் தமிழருக்கு இக்கதி நேர்ந்திராது. இப்பொழுது சமஷ்டிக் கொள்கையைக் கைவிடும்படி கேட்கிறார். ஆனால் அவர் எவ்விதமான மாற்றுத் திட்டத்தையும் வெளியிடாமல் திரு. செல்வநாயகம் அவர்களைத் தனிப்பட்டமுறையில் திட்டி உளம் பூரிக்கிறார். இது தமிழ்ப்பண்பாடல்ல. தமக்கு இன்னா செய்தார்க்கும் நன்மை செய்வதே தமிழன் கண்ட நெறி. ஐம்பதுக்கு ஐம்பது தோல்வி கண்டபோது, திரு. பொன்னம்பலம் அவர்கள் அரசியலில் துறவு கொண்டிருப்பாராயின் தமிழினம் பெருநன்மையடைந்திருக்கும்.

### மக்களே ஒற்றுமைப்பட வேண்டும்

தலைவர்களை ஒரு பொழுதும் ஒற்றுமைப்படுத்த முடியாது. மக்கள்தான் உண்மையை உணர்ந்து ஒற்றுமைப்பட வேண்டும். திரு. பொன்னம்பலத்தின் கட்சி கொள்கை யாதுமற்ற ஒரு சூனிய நிலையில் இயங்க முயல்கின்றது. அவரின் கருத்துப்படி நடந்தால் தமிழினம் பையமெல்லச் சிங்கள இனத்துடன் கலந்து அழிவது திண்ணம்.

வடமேல் மாகாணத்தில், பலப்பிட்டியில், ஏனைய கரையோரப் பிரதேசங்களில் நிகழ்ந்தது அனைத்திலங்கையிலும் நடந்தேறும். தமிழர்கள் இன்னலின்றி, துன்பமின்றிச் இரண்டு மூன்று பரம்பரைக்குள் சிங்கள இனத்தோடு சீரணித்து விடுவார். இதனை வெளிப்படையாகக்கூறி மக்கள் மனத்தை மாற்றினால் திரு. பொன்னம்பலம் அவர்களை ஒரு சத்தியவீரன் என்று வாழ்த்தப் பின்நிற்க மாட்டேன்.

பொன்னம்பலத்தின் திட்டம் தமிழரைக் காப்பாற்றப் போவதில்லை. உடலுக்குள் மறைந்திருக்கும்வியாதி போலத் தமிழினத்தை அதுவும் அழிக்கும் என்பது திண்ணம்.

மக்கள் என்ன வெறும் சதைப்பிண்டங்களா?

பொதுமக்கள் எப்பொழுதும் சரியான வழியைத் தெரிந்து கொள்கிறார்கள். தலைவர்கள்தான் தடுமாறுகிறார்கள். தமிழரசுக்கட்சி தனது முதற்றேர்தலில் இரண்டே ஸ்தானங்களை மாத்திரம் கைப்பற்றியது. தமிழ்க்காங்கிரஸ் அமோக வெற்றியீட்டவில்லையா? அப்போதைய சூழ்நிலையில் மக்கள் பொன்னம்பலத்தின் வழியை நல்லதென நம்பினார்கள்.

சம அந்தஸ்திலே நிலை கொண்டிருந்த தமிழ்க் காங்கிரஸ் சிங்களமே இலங்கையின் அரசகரும மொழி எனப் பிரகடனப்படுத்தப்பட்டபோதும், பின்னரும் சம அந்தஸ்துக்காக என்ன செய்தது? பாராளுமன்றத்தில் நியாயமான தமிழ் உபயோகச் சட்டம் வந்தபோது அதனை ஏன் எதிர்க்கவில்லை? அரசாங்கத்தை விட்டு ஏன் வெளியேறவில்லை? பாராளுமன்றமுறை தவிர வேறென்ன திட்டம் அதனிடம் உண்டு?

## மக்கள் குரல்

இணைப்பாட்சி அல்லது சமஷ்டி முறை இன்றைய சூழ்நிலையில் கிட்டக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை. எனினும், அது நல்லதொரு கொள்கை. தமிழர் இதயங்களில் ஏற்றி வைக்கப்பட்டுள்ள அந்த ஒளியை ஏன் அவித்துவிட வேண்டும்.

### ஒளியையேன் அவிக்கவேண்டும்

இணைப்பாட்சி முறை வசைந்து கொடுக்காத திட்டமென அரசியல் ஞானிகள் கூறுவர். எனினும், அதில் பரந்துபட்ட பல முறைகள் உண்டு. மகாத்மாகாந்தியடிகளின் கிராமசுயராஜ்யத் திட்டத்திலே இணைப்பாட்சி இழையோடியிருக்கிறது.

தமிழர்கள் சோசலிசக் கொள்கையினராயிருந்தாலும், சனநாயகக் கொள்கையினராயிருந்தாலும் இலங்கையில் தமிழர் வாழ வேண்டுமானால் இணைப்பாட்சியாலன்றி முடியாது.

### விடுதலைவரலாறு

பெரும்பான்மைப் பலம் ஆயுதபலம் போல மிருகபலமல்லாமல் தூய ஆன்மீக பலமல்ல. தமிழ் மக்கள் அடி — உதைபட்டார்கள் என்பது அவமானமல்ல. அது தியாகத்தின் சிகரம். அதற்காகத் திரு. பொன்னம்பலம் வெட்கமடைகிறார்.

விடுதலையின் வரலாறுகளில் அடி — உதைபட்டு, இரத்தஞ்சிந்தி, உயிர் துறந்தவர்களின் வீரந்தான் காவிய உருவம் பெறுகிறது. தமிழரசுக் கட்சி தமிழ் மக்களைத் தவறான வழியில் நடத்திச் செல்வதற்குத் தமிழ

முதற் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றியடைந்த திரு. பொன்னம்பலம் அவர்கள் அரசியல் நிர்ணயச் சபைவேண்டுமென்றுசொன்னாரே, அதற்கென்ன நடந்தது? தமிழ் மக்கள் தங்கள் கொள்கைக்காக வேரோடு அழிந்தாலும் நாம் வெட்கப்பட வேண்டியதில்லை. இத்துணிவுதான் பொன்னம்பலத்திடம் இல்லை. செல்வநாயகம் உடலில் நோய்ஞ்சியானாலும், உள்ளத்தில் வீரமுண்டு. அதுதான் பொன்னம்பலத்துக்கும் செல்வநாயகத்துக்கும் வேற்றுமை.

### துரோகங்கள்

திரு. பொன்னம்பலம் தமிழ் இனத்துக்குச் செய்த துரோகம் பல. சிறந்த அரசியல் ஞானியான பாலசிங்கத்தை அரசியலில் இருந்து கலைத்து விட்டது பெருமையா? திரு. மகாதேவா முதலியவர்களின் சேவைகளைத் தமிழினம் பெருமற்போன கைங்கரியம் நடத்தியவர் யார்? ஐம்பதுக்கு ஐம்பதுகோரியதற்குப் பதில் விகிதாசாரப் பிரதிநிதித்துவம்கோரியிருந்திருக்கலாம். அனைத்திலங்கைக் காங்கிரஸ் என்பது பெயர், இதுவரை அக்கட்சி வெளிமாகாணங்களில் எத்தனை பிரதிநிதித்துவம் பெற்றது?

தமிழ்க்காங்கிரஸ் காரர் வட மாகாணத்துக்குள் மாத்திரம் ஒதுங்கலாம், தமிழரசார் தமிழ்ப் பிரதேசங்களுக்கு இணைப்பாட்சிக்குள் அடங்கிய சுயாட்சி கேட்பதில் தவறு என்ன? திரு. பொன்னம்பலத்திடம் நிறைந்த வாக்கலங்காரம் உண்டு. அது நீதிமன்றங்களில் உதவலாம். ஆனால், தற்காலப் பாராளுமன்ற நடைமுறையில் அதனால் பயனில்லை.

### தினசரி முயற்சி

சிங்கள முதலாளிகட்கு சொந்தமான தமிழ் தினசரிப்பத்திரிகையொன்று ஐக்கியத்தின் பெயரால் திரு. பொன்னம்பலத்துக்கும், திரு. செல்வநாயகத்துக்கும் சிண்டு முடிய முயல்கிறது. நான் சில நாட்களுக்கு முன் தமிழ்மக்கள் ஐக்கியப்படுவதற்கு உள்ள இடையூறுகளை விளக்கிக் கட்டுரையொன்று இப்பத்திரிகைக்கு எழுதினேன். அக்கட்டுரை பிரசுரமாகவில்லை.

திரு. செல்வநாயகம் தலைவர்போட்டியை விரும்பாதவர், தமிழ்க் காங்கிரஸ் தலைவரிடம் தாம் தமிழரின் முடிசூடா மன்னர் என்னும் ஒருவகை அகம்பாவமுண்டு. பெரிய இடத்திலுள்ளவர்கள் இத் தலைவர்களை ஒன்றுசேர்க்க முயல்வதாகக் கேள்விப்படுகிறேன். தலைவர்களின் ஒற்றுமையிலும்மக்களை ஒற்றுமைப்படுத்த முயல்வது மேல்.

தமிழரசுக் கட்சி தனது தாரக மந்திரமான சமஷ்டியைக் கைவிட வேண்டுமென்று நிபந்தனை விதிப்பது பேதைமையாகும். திரு. செல்வநாயகத்துக்கோ தமிழரசாருக்கோ அந்த உரிமையில்லை. அது தமிழ் மக்களின் சொத்து, மக்களின் சொத்தைச் சிதைக்கவோ, சூறையாடவோ எவருக்கும் உரிமையில்லை. கடைசித் தமிழ்மகன் ஒருவனேயிருந்த போதிலும் அத்தீபத்தை அணைத்துக் கொண்டே உயிர்விட வேண் என்பதே எமது வேணவா.

—வித்துவான். நீ.மே.யோ. வேதநாயகம்.

கொழும்பு.

கீழ் கண்ட இடங்களுக்கு சுதந்திரன் விற்பனையாளர்கள் தேவை

ஆனைக்கோட்டை
கொட்டகலை
மாவிட்டபுரம்
நிக்கவரெட்டிய
பசறை
எஹலியாகொடை

விபரங்கட்கு

சுதந்திரன் விநியோக அதிபர்

த: பெ: இல 1183 கொழும்பு-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது சிறுகதை

# சந்தனக்கட்டி

## தையிட்டி அ. இராசதுரை

முளாசி எரிந்துகொண்டிருந்த நெருப்பின் வெம்மை வேகத்திற்குத் தக்கதாகத் தாளம்போட்டுக் கூத்தாடுவதைப் போன்று சோற்றுலை கொதித்துப் பொங்கிக் குமுறிக்கொண்டிருக்க... சீதா தன்னுடைய மனதைப் பலபாட்டிற்கும் அலைய உலையவிட்டபடி உலைமூடியை அவுக்கென்று திறந்ததுதான் தாமதம்... நீராவி என்ஜினின் புகைக்குழாயிலிருந்து தபுதபுவென்று எழும்பிக்கொண்டிருந்த புகையாக சோற்றுலையிலிருந்து பொங்கி எழும்பிய ஆவியின் வீசுரம் அவளுடைய கையைத் தாக்கியதும் சோற்றுலைக்குள் கையை வைத்தவளாகத் துடித்துப் பதைத்தபடி அப்படியே உலைமூடியைக் கைவிட்டுவிடுகின்றாள்...

அவளுடைய நல்லகாலத்திற்கு அடுப்புப் புகட்டின் மேல் கைதவறி விழுந்த உலைமூடி உடையவில்லையாயினும்... தனது எஜமானி அம்மாளின் பனங்காய்க் குத்துக்கள் தனது பிஞ்சு முதுகில் பயங்கரமாக விழுந்துமுடிந்துவிட்டதைப் போன்ற கெடிக்கலக்கத்தில் தேகம் முழுவதும் ஒரு கணம் ஒடிநடுங்க... அகப்பையினால் சோற்றைத் துழாவிவிட்டு அகப்பையில் வெறும் சோற்றையள்ளிக் கையினால் நசித்துப் பார்த்தவளுக்கு... சோறு வடிக்கவேண்டிய 'பதம்' துண்டாகப் பிடிபடாமல்... அன்றைக்குத்தான் முதல்முதலாக அடுப்படிக்குள் வந்தவளாக மனம் குழம்பியபடி... அடுப்பு நெருப்பைக் நல்லாக் குறைத்துவிடவேண்டுமென்று சரியோ பிழையோ சும்மா நினைத்துக்கொண்டு மனத் தடுதாளியில் நெருப்பை நல்லாகக் கூட்டி முளாசக்கூடியதாக எரித்துவிட்டு அதே யடிக்குள் நெருப்பைக் குறைக்கப்போய் கைவிரலையும் நெருப்பில் சுட்டுக்கொண்டு ஆத்தே... ஊத்தே... என்றபடி... இன்றைக்கு வெள்ளிக்கிழமை ஆருதக் கறிதானே ஆக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு பறணில் கட்டித் தூக்கியிருந்த கருவாட்டுச்சரையை மளமளவென்று அவிழ்க்கப் போய்... நாக்கு இரண்டுதுண்டாகக் கூடியதாக... நாக்கைக் கடித்துக்கொண்டபடி ...கத்தரிக்காய்ப் பாற்கறி வைப்பதற்காக பாகற்காயை எடுத்து வெட்டப்போய்... கைவிரலைக் கததியில் படுமோசமாக வெட்டிவிட்டு அந்த வெட்டுக்காயத்திற்கு கோப்பித்தூள் வைத்துக் கட்டுவதற்காகக் கோப்பித்தூளை எடுக்கப்போய் வெட்டுக்காயத்தில் கறித்தூளை வைத்துவிட்டு வாய்க்குள் அப்படியே ஒரு இருத்தல் கறித்தூளைக் கொட்டிக்கொண்டவளாக... ஆ... ஊ...

ஆ... ஆவென்று தலையிலடித்தபடி... வழமையாகச் சமையலில் காட்டும் சுறுசுறுப்பையும் அக்கறையையும் கண்ணூறுபட்ட கணக்காகத் திடீரென்று இழந்துவிட்டவளாக... ஒன்றிற்குமே கைமெய் ஏவாமல் பிழைக்குமேல் பிழைவிட்டுக் கொண்டிருப்பதுபோன்ற பொல்லாத நெஞ்சிடிப்புத் துடிப்போடு... தற்கொலை செய்துகொண்டு ஆத்மசாந்தி கிடைக்காமல் அந்தரத்தில் நின்றலையும் ஆவிமாதிரியாக அடுப்படிக்குள் நின்று சுழன்றடித்தவள்... மனம்பொறுக்காமல் கிணற்றடிப்பக்கமாக விறுவிறென்று ஓடிப்போய்... கிணற்றையெட்டிப் பார்த்துவிட்டு ஒருவகையும் செய்துகொள்ளமுடியாதவளாகக் கடுமையாக யோசித்துக் கெடிக்கலங்கி மனதைவிட்டபடி மறுபடியும் அடுப்படிக்குள் வந்துவிடுகின்றாள்.

...அவளுடைய நினைவு வானில் திடீரென்று சூறாற்றிலும் வேகமாக அந்த 'சந்தணசோப்' கருமுகிற் கூட்டமாகப் பரவி இருள... அவளுடைய எஜமானி அம்மாள்... பெருமினனலாக மின்ன... "என்னடீ வேலைக்கார நாயே... உனக்கிவளவு நெஞ்சுத் துணிவாடீ... நான் போடுற சந்தண சோப்பையெடுத்து உன்ரை மேலிலே போட்டுத் தேய்க்கிறதுக்கு? ஆ... கடவுளே... இதுகுமொரு அநியாயமோ... எடியேய்... ஆரைக் கேட்டடீ நீ... இவளவு துணிவாய் என்ரை சவுக்காரத்தையெடுத்துப் போட்டனீயடீ ...உன்ரை கால் தட்டிமுறிப்பனடீ... உன்ரை கை தட்டிமுறிப்பனடீ... ஏன்ற... கள்ளீ ...அழுது மாய்மாலம் பண்ணிக் காட்டுறாய்... பத்தியெரிவாளே... உன்ரை இரண்டு கண்ணையும் நெருப்புக்கொள்ளிதான் பிடிச்சுச் சுட்டுப் பொசுக்குவன் பாத்துக்கொள்ளடீ... ஐயோ கடவுளாரே... என்ரை சவுக்காரத்தையெடுத்து தன்ரை ஊத்தை... மேலிலை போட்டுத் தேச்சதுமல்லாமலுக்கு... சவுக்காரத்தையும் தூக்கி கிணத்துத் தண்ணீக்கை போட்டிட்டாளே... பத்தியெரிவாள்... எனி உவளின்ரை மேலில போட்டுத் தேச்ச சவுக்காரம் விழுந்த தண்ணியைத்தான் ஆரும் கிள்ளி வாயில விடலாமே... எடியேய் ..இங்கை என்னைப் பாரடீ... இன்டைக்கி அவர் கந்தோராலை... வாறதுக்கு முந்தி... இந்தச் சவுக்காரம் வெளியாலை வராட்டிக்கு... அதுக்குப் பிறகுதான்... உனக்கென்ன திருவிழா நடக்குமெண்டதை... நீ வடிவாயிருந்து பார்''...

எஜமானி அம்மாளின் இந்தச் சிம்மகர்ச்சனை பயங்கரப் பேரிடியாக முழங்கித் தள்ளி கண்ணாடி வீட்டில் விழுந்த இடியேறாக அவளுடைய இதயத்தைப் பொடிப்பொடியாக்கி வைத்துவிடுகின்றன.

...சீதா மறுபடியும் பிள்ளையைக் கிணற்று மிதியில் வளர்த்திவிட்டு வந்தவள் போல சொல்ல முடியாத மன அந்தரத்தோடு கிணற்றடிக்கு ஓடிவிடுகின்றாள்.

...அவளுடைய ஆசைக்குத்தக்கதாக வினைவைத்துவிட்ட அந்த சந்தணசோப ...''உனக்கேன் இந்தவேலை'' யென்று ஏளனமாகக் கேட்பதைப் போன்று கிணற்றின் அடித்தளத்தில் கல்மனம் படைத்த வைராவியாக ஆடாமல் அசையாமல் இறுமாப்பாக வீற்றிருந்தது.

''ஐயோ கடவுளே... 'ஆசை' என்றது எல்லாருக்கும் ஒரு பொதுச் சொத்துத்தானே... அப்பிடியிருக்க ...எஜமானி அம்மா போடுற சந்தண சோப்பையெடுத்து நான் போட ஆசைப்பட்டது குற்றமா...? ஏழைகள் ஒன்றுக்கும் ஆசைப்படவே கூடாதா...?? அதுகும்... ஒரு வீட்டிலே வேலைக்காறியாய் இருக்கிறவைதான் துப்பரவாக ஆசைப்படக் கூடாதா...??

சீ... இந்தக் கடவுள் எவளவொரு பெரிய ஓரவஞ்சனையானவர்...... அவர் நல்லவரெண்டா... எல்லாரும் அவருக்கு ஒண்டெண்டா... ஏனவர்... இப்பிடியெல்லாம் ... பனையாலை விழுந்தவனை மாடேறி உழக்கினமாதிரியாக... என்னை எஜமானி அம்மாவிட்டைக் கையும் மெய்யுமாகப் [illegible] தோடை [illegible] சவுக்காரத்தையும் கிணத்துக்கை விழப்பண்ணினவர் இந்த வேலைக்காறி செய்தது அவருக்குத்தான் கொஞ்சமும் பொறுக்கேல்லை... அதுக்குத்தான் இந்தத் தண்டனையோ...?'

கிணற்றை எட்டிப்பார்த்தபடி இப்படியெல்லாம் தன்னுடைய இதயக்குமுறலைக் கிணற்றிற்குள்ளேயே சீதா கொட்டித்தீர்த்துக்கொண்டிருந்தாள்...

அவளுடைய இதயக்குமுறலைக் கேட்டுக் கலங்கிப் போன கிணற்றுநீர் அவளுக்காக ஊரையும் உலகத்தையும் அழித்தொழிப்பதற்காக பிரளயகாலக் கடலாக சினம்கொண்டு வேகமாக... அதிவேகமாகப் பொங்கி எழும்பி விடுவதைப்போல்... அவளுடைய இதயக்குமுறல் கிணறுமுழுவதும் அகோரமாக எதிரொலித்துக்கொண்டிருந்தன.

...சீதா ஆவியாக வீட்டிற்குள் ஓடிவந்துவிடுகின்றாள்...

...தன்னை வாயில் வந்தபடி கண்டபாட்டிற்குப் பேசிய எஜமானி அம்மா... சொற்பநிமிடங்களின் பின்னர் நல்லாகச்சீறி சீறி அழுதபடி... கையிலொரு பிரப்பம் கூடையையும் தூக்கிக்கொண்டு வெளியில் வெளிக்கிட்டுப்போன காட்சி சீதாவின் நினைவில் பெரிய நாகபாம்பாகப் படம் விரித்தாட ...எஜமானி அம்மா... கடைத் தெருவுக்குத்தான் ஏதாவது சாமான் சக்கட்டு வாங்கப் போனாவோ...?? அல்லது கந்தோருக்கு எஜமானரிடம் நடந்ததைச் சொல்லத்தான் போனாவோ??? என்றெல்லாம் சந்தேகப் பேயோடு சேர்ந்து பலபாட்டிற்கும் சீதா ஆச்சிப்பூச்சியாட்டத் தொடங்கியபடி மறுபடியும் ஓரிடத்தில் ஒரு விநாடிப்பொழுதுக்காவது நிலைத்து நிற்க மருந்திற்கும் மன நிம்மதி கிடைக்காதவளாக கிணற்றடிப்பக்கமாகப் பறந்துவிடுகின்றாள்.

...தெரிந்தோ தெரியாமலோ ஒரு சின்னப் பிழை விட்டுவிட்டால்... அதற்காக நினைத்து நினைத்து வருடக் கணக்காக தன்னைப்போட்டு அரித்துக்குடித்துச் சித்திரவதை செய்வதில் முதலாம் நம்பரான தனது எஜமானி அம்மா... இன்றைக்கி... அதுவும் ஒரு பிழைக்கு இரண்டு பிழைவிட்டதில்... சாடிக்கேற்றமூடியான எஜமானரோடு சேர்ந்து இரண்டு வேங்கைப் புலிகள் சேர்ந்து ஒரு ஆட்டுக்குட்டியைத் தாக்குவது மாதிரித்தான் தாக்குவாளென்று பயங்கரமாக நினைக்கத்தொடங்கியதும் தான் பார்த்த 'மயானகாண்டம்' கூத்துத்தான் ஒருமுறை அவளுடைய நினைவுமேடையில் அமர்க்களமாக நடந்து முடிகின்றது...

மறுபடியும் வீட்டிற்குள் வந்த சீதாவின் நினைவில்... ஒரு மாதத்திற்கு முன்னராக எஜமானர் எடுக்கும் பத்திரிகையில்தான் பார்த்த ஒரு சிறுகதை பயங்கரமாக விழுந்து... அவளுக்கு நடக்கப்போவதற்கும் கட்டியம் கூறிமறைவதுபோல் மறைந்துவிடுகின்றது.

சீதாவின் கண்கள் கண்ணீரைக் கொட்ட அவளுடைய இதயம் அந்த வேலைக்காரியை வணங்கிக்கொள்கிறது.

ஒருசிறு பிழைக்காக தன்னை அடித்துச் சித்திரவதைசெய்துமண்ணெண்ணை ஊற்றிக்கொளுத்திய எஜமானரையும் எஜமானியையும் அந்த வேலைக்காரி தனக்கு உப்பிட்டதை மறக்கக் கூடாதென்பதற்காக... தன் [illegible] தான் தன்னுடைய உடையிலே நெருப்புப் பிடித்தது என்று தனது மரண வாக்குமூலத்தில் போலீசாருக்குச் சொல்லிக்கொண்ட அவளுடைய உயர்ந்த தன்மையை நினைக்கும்போது தனக்குமொன்று அப்படி நடந்துவிட்டால்... தானும் உப்பிட்டவரை மறக்காதபடி அந்தப் பாத்திரமாகவே மாறிவிடவேண்டுமென்று இதயபூர்வமாக எண்ணிக்கொண்ட சீதா... அடுப்படிக்குள் போகின்றாள்.

அடுப்பெல்லாம் அணைந்து ஆறி அமைதியாக கிடக்கின்றன.

வெளியில்... புயலுக்குப்பின் அமைதியாக... மரங்களின் இலைகள்கூட ஆடாத ...சந்தோஷமான அமைதி... அந்த வீட்டின் நாய் அமைதியாகத் தூங்குகின்றது... அதற்குப் பக்கத்தில் என்றுமில்லாதவாறு அந்த வீட்டுப் பூனையும் அமைதியாகத் தூங்கிக்கொண்டிருந்தது.

அமைதியான உலகத்தில் அமைதியற்ற ஒருத்தியாக... கிணற்றடிக்குப்போய்விட்ட சீதா... துலாவை மளமளவென்று கிணற்றிற்குள் தாழ்த்துவிட்டு துலாக்கொடி வழியே கிணற்றிற்குள் இறங்கிவிடத் தயாரானவள்... ''சீதா... சீதா'' என்ற குரல் கேட்டுத் திடுக்குற்றுத் திரும்பிப் பார்க்கின்றாள்... ''......!!!''

''என்ன சீதா பயப்பிடாமை... இப்பிடி வா சீதா...'' கருங்கல்லிலிருந்து ஈரம் கசிந்து... உருகி வழிவதைப் போல் அவளுடைய எஜமானி அம்மாள் நின்றுகொண்டிருந்தாள்.

''இந்தா சீதா... இது உனக்கு... இது உனக்கு... இதைப் பயப்பிடாமல் பிடி சீதா... இனிநீ... என்ன செய்தாலும் நான் மூச்சுக்கூடவிடமாட்டன் சீதா... சத்தியமாக''

இப்படிச் சொல்லியபடி தன்னுடைய எஜமானி நீட்டிய மூன்று சந்தண சோப் கட்டிகளையும் பயபக்தியோடு இருகரம் நீட்டி நடுங்கும் உள்ளத்தோடு வாங்கிக்கொண்ட சீதா... ''அம்மா...'' என்று கதறியபடி தனது எஜமானியின் கால்களில் விழுந்து வணங்கப் போனதும்... எஜமானியின் கரங்கள் அவளைத் தடுத்து தன்னோடு இறுக அணைத்துத் தழுவி தாய்மையின் மேன்மையான சுகத்தைக் கொடுக்க...

''சீதா... நானும் உன்னைப் போலை... இந்த வயதிலை ஒரு அநாதைதான் சீதா... ஒரு நாள் நானும் இப்பிடித்தான் சீதா... பெரியம்மா போட்டுக் குளிக்கிற சந்தண சோப்பை ஓராசையில் எடுத்துப்போட்டுப்பாக்கப்போய் பெரியம்மாவிட்டை கையும் மெய்யுமாகப் பிடிபட்டு சவுக்காரத்தையும் கிணத்துக்கை போட்டிட்டு... அப்பப்பா... பெரியம்மாவிட்டை பட்டபாடு... அதுதான் சீதா... ஆசை எல்லாருக்கும் ஒண்டுதானே... நானும்... ஒரு பெரியம்மாவாக மாறிவிட்டனேயெண்டு... எப்பிடியோ நினைக்கவேண்டி வந்ததுதானே... எனக்கு உன்னை நினைக்கப் பெரிய பாவமாயிருந்து அழுகை கூடி வந்திட்டது சீதா''வென்று பால் உபாதியில் கன்றைத் தேடிக் கதறியபடி ஓடிவந்ததாய்ப் பசு... கன்று ஓடிவந்து இடித்து இடித்துப் பால் குடிக்கத்தொடங்கியதும் கன்றை நக்கியபடி கன்றிற்கு நன்றாக இரங்கிக் கொடுப்பதைப் போன்ற நிலையோடு எஜமானி சொல்லிக்கொண்டதும்... தன்னுடைய கைகளில் கிடக்கும் அந்த சந்தண சோப்புக்களின் சந்தண மணமும் தன்னுடைய எஜமானி அம்மாளின் நல்லகுணமும் இரண்டறக்கலந்து தனது வெள்ளை உள்ளமெங்கும் ஒருவித தெய்வீக மணத்தைப் பரப்பிக்கொண்டிருப்பதைப்போன்ற கட்டுக்கடங்காத விசுவாசப்பெருக்கோடு சீதா... தன்னுடைய எஜமானி அம்மாளின் முகத்தை வளர்த்த நாயாக அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

(யாவும் கற்பனை)

## இ. தொ. கா. முயற்சி வெற்றி

இ. தொ. கழகத்தின் தொழில் உறவுக் காரியதரிசி திரு. செ. கலியப்பெருமாள் நுவரெலியா நகரில் பஸ் தரிப்பு நிலையத்தில் தங்குமிடம் ஒன்று இல்லாதது பற்றியும், மற்றும் இவை நிலவுவது பற்றியும் மேற்படி நுவரெலியா இலங்கைப் போக்குவரத்துச் சபை மனேஜருடன் நுவரெலியா பா/உ டனும், இ. போ. ச. தலைமை காரியாலயத்துடனும் தொடர்பு கொண்டதன் பலனாக நுவரெலியா நகரில் உடன் தங்குமிடம் கட்டப்பட்டுள்ளது.

மேலும் இது பற்றி இலங்கைப் போக்குவரத்துப் பொது தொடர்பு அதிகாரி கழக தொழிலுறவு அதிகாரிக்கு எழுதிய கடிதத்தில் மேலும் தாங்கள் குறிப்பிட்ட குறைகள் யாவும் நிவர்த்தி செய்ய உடன் நடவடிக்கை எடுக்குமாறு நுவரெலியா இ. போ. ச. நிர்வாகியைக் கேட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4-வது வெற்றி வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை)
விஜிதா (அட்டன்) கல்யாணி (நாவலபிட்டி)

● எம். ஜி. ஆர்., ● சரோஜாதேவி
● நம்பியார் ● நாகேஷ் ● மனோரமா

—நடிக்கும்—

# நான் ஆணையிட்டால்

## 11-ம் திகதி வெள்ளி முதல்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை)
மற்றும் திரைகளில்

● எம். ஜி ஆர். ● சரோஜாதேவி
● அசோகன் ● நம்பியார் ● ஜி. சகுந்தலா

—நடிக்கும்—

# பறக்கும் பாவை

கிங்ஸ்லி (கொழும்பு) கடைசி வாரம்

# நான்

## சிலோன் தியேட்டர்ஸ் திரைகளில் மாபெரும் தீபாவளித் திரைவிருந்து



* சிவாஜிகணேசன், * பத்மினி,
கே. ஆர். விஜய நாகேஷ் —நடிக்கும்—

# இருமலர்கள்

கெயிட்டியில் இப்பொழுது காட்சிதருகிறது
'தி அட்வெஞ்சேஸ் ஆப் ரெபின் ஹூட்'

செல்லமகால் திரையில் இப்பொழுது காட்சிதருகிறது
★ ஜெய்சங்கர் ★ ராஜஸ்ரீ ★ நாகேஸ் ★ மாதவி —நடிக்கும்


# செல்வ மகள்

## வெற்றி முழக்கமிடும் 101-வது தினம்

சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்ப்பாணம்) றேயல் (வவுனியா) சாரதா (களுவாஞ்சிக்குடி) நியூவிஜயேந்திரா (அநுராதபுரம்) பிரஜாசல (இரத்மலான) ஆரியமகால் (அம்பாந்தோட்ட)

ஆகிய திரைகளில்
★ ஜெமினிகணேசன் ★ டி. கே. பகவதி ★ பி. சரோஜாதேவி
★ எல். வரலட்சுமி ★ நாகேஷ் ★ விஜயநிர்மலா — நடித்த —
கே. எஸ். கோபாலகிருஷ்ணனின்

# பணமா? பாசமா?



## 10-ம் திகதி வியாழன் முதல்-

சென்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்) ராஜேஸ்வரா (மட்டுநகர்) லிபேட்டி (அட்டன்) ஜோதி (திருமலை)

ஜெமினி, சரோஜாதேவி, விஜயகுமாரி, அசோகன்,
தங்கவேலு, சோ, கருணாநிதி —நடித்த—
ஏ. எல். எஸ் புரொடக்ஷன்

# பெண் என்றால் பெண்

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் [illegible] கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ. இலக்கத்தில்
1968-ம வருடம் அக்டோபர் மாதம் 6-ம் திகதி [illegible] பிரசுரிக்கப்பட்டது, தொலைபேசி: 23411

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org